Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41 கதிர் : 35 | புதன்கிழமை 31 டிசெம்பர் 2025 | மார்கழி 16 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056 | பக்கங்கள் – 16 விலை – ரூபா 50


புதன்பொய்கை

## மருத்துவமனையில் டக்ளஸ்!

கொழும்பு, டிசெ. 31
முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் »15

பிரச்சினை தீர்க்கப்படும்வரை

# திஸ்ஸ விகாரைப் பகுதிக்குள் எந்தக் கட்டுமானமும் இல்லை



புத்தர் சிலை எடுத்துவரப்படாது
விசேட பெரஹராவும் நடக்காது
விகாராதிபதி நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 31
தையிட்டி திஸ்ஸ விகாரையைச் சூழவுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையில், விகாரை வளாகத்தில் எவ்வித புதிய கட்டுமானங்களும் அமைக்கப்படாது என்று திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின்தோட்ட நந்தாராம தேரர் உறுதியளித்துள்ளார். »15

## டக்ளஸ் தொடர்பில் தீவிர விசாரணைகள்

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 31
முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒப்படைக்கப்பட்ட துப்பாக்கிகள் தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலா »15

## திஸ்ஸ விகாரைக் காணிகளை மக்களிடம் உடன் ஒப்படைக்குக



ஆரியகுளம் நாகவிகாராதிபதி பகிரங்கம்
காணிகளை மக்களுக்கு வழங்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெம்பர் 31
தையிட்டி திஸ்ஸவிகாரை சட்ட விரோதமாகவே அமைக்கப்பட்டுள்ளது. மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் »15

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த

## பிரதேசசபை உறுப்பினர் கஞ்சாவுடன் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 31
யாழ்ப்பாணத்தில் நான்கு கிலோகிராம் கஞ்சாவுடன் தமிழரசுக் கட்சியின் நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலி »15

குறிகாட்டுவானில்

## படகு வசதிகள் இல்லாமல் பயணிகள் பெரும் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 31
யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவான் ஊடாக நெடுந்தீவுக்குச் செல்லும் பயணிகள் போதிய படகு வசதி இன்றி பரிதவிக்கும் நிலை தொடர்ந்து வருகின்றது.
நெடுந்தீவுக்குப் பயணிக்கும் நெடுந்தாரகைப் படகில் 100 பயணிகளுக்கே »15



தாளையடிக் கடற்பரப்பில்

## அலையில் அள்ளுண்டவர் நேற்றுச் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 31
வடமராட்சி கிழக்கு - தாளையடி கடற்பரப்பில் நீராடிக் கொண்டிருந்த வேளை, கடல் அலையுடன் அடித்துச் செல்லப்பட்ட இளைஞர் இரு தினங்களுக்குப் பின்னர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.
வடமராட்சி கிழக்கு, ஆழியவளைப் பகுதி »15



“என்னடா இது?
எல்லாப்
பிக்குமாருக்கும்
சொல்லிவைச்ச மாதிரி
ஒரே நேரத்தில ஞானம்
பிறந்திருக்குது”

## தருமபுரத்தில் நகை திருட்டு; சந்தேகநபர் நேற்றுக் கைது!

ஒருதொகை நகைகளும் மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 31
கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில், நேற்றுமுன்தினம் பெருந்தொகை பணமும் தங்க நகைகளும் திருடப்பட்டிருந்த நிலையில், சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் »15

## நாணய நிதியக்குழு இலங்கைக்கு வருகை

கொழும்பு, டிசெ. 31
சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டக் குழுவினர் அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் இலங்கைக்கு »15

காணாமல் ஆக்கப்பட்ட

## மகனைத் தேடியலைந்த தந்தை பரிதாபச் சாவு!

தொடர்கிறது துயரம்



வவுனியா, டிசெ. 31
காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிவந்த தந்தையொருவர், திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். »15

## கொழும்பு மாநகரசபையில் இன்று பட்ஜெட் பலப்பரீட்சை

தப்புமா திசைகாட்டி?

கொழும்பு, டிசெ. 31
கொழும்பு மாநகரசபையில் இன்று மீண்டும் பட்ஜெட் பலப்பரீட்சை நடைபெறவுள்ளது. மாநகரசபையின் பாதீட்டை நிறைவேற்றுவதில் அரசாங்கமும், தோற்கடிப்பதில் எதிரணியும் தீவிரம் காட்டி »15

## செம்மணி வளைவுப் பகுதியில் அசைவ உணவகம் வேண்டாம்

நல்லூர் பிரதேசசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 31
யாழ்ப்பாணம் நுழைவுப் பகுதியாக உள்ள செம்மணி வளைவுப் பகுதியில், அசைவ உணவகங்கள், விடுதிகள், விருந்தகங்கள் போன்றவற்றை அமைப்பதற்குத் தடை விதித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
நல்லூர் பிரதேசசபையின் »15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4301 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 26 31 41 55 |
| விசேட எழுத்து | P |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1368 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 22 24 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0327 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 1 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2407 |
| ஆங்கில எழுத்து | N |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 01 17 38 50 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6059 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 1 5 5 1 0 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2089 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 12 55 56 74 |
| விசேட எழுத்து | L |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0175 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 41 45 |




### பல்கலை ஆணைக்குழுவின் தலையீட்டுக்கு எதிராக

# வவு. பல்கலை ஆசிரியர் சங்கம் அடையாளப் பணிப்புறக்கணிப்பு

**வவுனியா, டிசெ.31**

**பல்கலைக்கழகங்களின் துறைத்தலைவர்கள் மற்றும் பீடாதிபதிகளின் நியமனம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கம் நேற்று அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டது.**

பல்கலைக்கழகங்களின் துறைத்தலைவர்கள் மற்றும் பீடாதிபதிகளின் நியமனம் தொடர்பான பல்கலைக்கழக சட்டத்திருத்தம் தொடர்பான பிரேரணை ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டது. அதன் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கடந்த 3ஆம் திகதி அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

துறைத்தலைவர்கள் மற்றும் பீடாதிபதிகளின் நியமனம் தொடர்பான எந்த ஒரு நடவடிக்கையும் மறு அறிவித்தல்வரை உடனடியாக ஒத்திவைக்கவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இத்தகைய முறையற்ற தலையீடானது அரசு பல்கலைக்கழகங்களின் சுயாதீனச் செயற்பாட்டைப் பாதிக்கும் என்பதன் அடிப்படையில் பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் கடும் எதிர்ப்பு வெளியிட்டதுடன், அந்தக் கடிதத்தை மீளப்பெறவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது. ஆயினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் துறைத்தலைவர்கள் மற்றும் பீடாதிபதிகளின் நியமனம் தொடர்பான தமது கருத்தை நியாயப்படுத்தி மீண்டும் ஒரு பதில் கடிதத்தைக் கடந்த 18ஆம் திகதி அனுப்பியிருந்தது.

பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக சாதகமான முடிவும் எட்டப்படாத நிலையில் பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் அந்தக் கடிதங்களை மீளப்பெற வலியுறுத்தி நேற்று அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் இந்தப் போராட்டத்தில் பங்குகொண்டது. (எ-110)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0767 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 5 4 4 4 7 7 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3033 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 30 33 35 55 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 07 09 44 75 |
| வெற்றி வாரம் | 5194 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0863 |
| வெற்றி இலக்கம் | 22 34 43 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ராசி | கன்னி |
| வெற்றி இலக்கம் | 02 26 41 55 |
| சீட்டிழுப்பு வாரம் | 4745 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கம் | 14 43 57 72 |
| வெற்றி வாரம் | 2209 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 30.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 09 11 29 41 |
| வெற்றி வாரம் | 2859 |

### தொலைக்காட்சி அலைவரிசைகள்

# விதிமுறைகளை மீறினால் அனுமதிப்பத்திரம் இரத்து

### அமைச்சர் நளிந்த எச்சரிக்கை



கொழும்பு, டிசெ.31

தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு ஊடக அமைச்சால் வழங்கப்பட்டுள்ள ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்கள் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவையே என சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அந்த நிபந்தனைகள் மீறப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலைவரிசைகளின் அனுமதிப் பத்திரத்தைத் திரும்பப் பெறுவதற்கு அமைச்சருக்கு முழு அதிகாரம் உள்ளது. ஒவ்வொரு தொலைக்காட்சி நிலையத்திற்கும் வழங்கப்படும் ஒளிபரப்பு அனுமதி தற்காலிகமானதே என்றார். (எ-இ)

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க தே.ம.ச. அரசாங்கம் முயற்சிக்காது!


### தயாசிறி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.31

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்ற உறுதிமொழியை அரசாங்கம் வழங்கியுள்ளது. ஆனால் அந்த உறுதிமொழி நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. சிறுபான்மையினக் கட்சிகள் இதற்கு இடமளிக்காது. அந்தக்கட்சிகளின் அனுமதியுடன் தான் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு செல்லமுடியும்.



அதேபோல மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிப்பதற்குரிய முயற்சியிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்றார். (எ-44)

# 6 அமைச்சர்களின் சொத்துகள் இலஞ்ச ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, டிசெ.31

பணச்சலவைச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்படாத சொத்துகள் தொடர்பில், அரசாங்கத்தின் 6 அமைச்சர்களிடம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு விசாரணை நடத்தவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, வசந்த சமரசிங்க, குமார ஜெயக்கொடி, சுனில் ஹந்துன்நெத்தி, நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் பிரதியமைச்சர் சுனில் வட்டகல ஆகியோருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஊழல் மற்றும் வீண்விரயத்துக்கு எதிரான குடிமக்கள் அதிகாரத்தின் தலைவர் ஜமுனி கமந்த துஷார ஆணைக்குழுவில் தாக்கல்செய்த முறைப்பாட்டை அடுத்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதுதொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்கு ஜமுனி கமந்த துஷார நேற்றுச் செவ்வாய்க்கிழமை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.மாவட்டத்தில்

# 'பிரஜாசக்தி' தலைவர்களுக்கு எதிர்ப்பை மீறி நியமனக்கடிதம்

**யாழ்ப்பாணம்,டிசெ.31**
**'பிரஜாசக்தி' வறுமை ஒழிப்புக் கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின், சமூக அபிவிருத்திக்குழுக்களின் தலைவர்களுக்கு நியமனக்கடி தங்கள் அண்மையில் வழங்கப் பட்டுள்ளன.**



கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் கலந்து கொண்டு நியமனக்கடிதங்களை வழங்கினார்.
நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 19 பேருக்கு நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

வறுமை ஒழிப்பு, சமூக மேம்பாடு மற்றும் மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளை அடித்தள மட்டத்தில் வலுப்படுத்தும் நோக்குடன், இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்த நியமனங்கள் தற்போது அரசியல் ரீதியான விவாதங்களைத் தோற்றுவித்துள்ளன.

குறிப்பாக, உள்ளூராட்சிசபைகளின் தவிசாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை முற்றாகப் புறக்கணித்துவிட்டு, இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் கடும் அதிருப்தி வெளியிட்டு வரும் நிலையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-100,27)



## கல்லுண்டாய் வீதிக்கு விரைவில் வெளிச்சம்

யாழ்ப்பாணம்,டிசெ.31
இருளில் மூழ்கியிருந்த கல்லுண்டாய் வீதிக்கு, புதிதாக மின்கம்பங்களை நட்டு, மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
வலிகாமம்மேற்குப்பிரதேசசபையின் முயற்சியால், மாகாண அபிவிருத்தி நிதியில் இருந்து 9.3 மில்லியன் ரூபாவும், சபை நிதியில் இருந்து 0.428 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு, மின்சாரசபையால் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கல்லுண்டாய் வீதி இரவில் இருளில் மூழ்கியிருப்பதால், விபத்துகள், வழிப்பறிக் கொள்ளை போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. வீதிக்கு மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த நிலையில் இருளில் மூழ்கியிருந்த வீதி விரைவில் வெளிச்சம் பெறவுள்ளது. (க-27)

## கட்டுநாயக்கவில் நால்வர் குஷ் போதையுடன் கைது!

கொழும்பு,டிசெ.31
20 கோடியே 68 இலட்சத்து ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் நான்கு பேர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து விமானநிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்டவர்களில் இரண்டு பெண்களும் அடங்குகின்றனர் என்று விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
சந்தேகநபர்கள் நால்வரும் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தில் இருந்து இந்தியாவுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்துள்ளனர். (ச-இ)

## கிளை முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிசெ.31
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கிளை முகாமையாளர்களுக்கு நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
கிளை முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.
புதிதாகநியமிக்கப்படும்கிளைமுகாமையாளர்களுக்கு குறுகிய கால பயிற்சியும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

## மரக்கறி விலை காட்சிப்படுத்தல் சந்தைகளில் இனிக் கட்டாயம்!

யாழ்ப்பாணம், டிசெ.31
மரக்கறிகளை விற்பனை செய்யும்போது அதன் விலையை காட்சிப்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.
சந்தையில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளதால், சில வர்த்தகர்கள் வெவ்வேறு விலைகளில் மரக்கறிகளை விற்பனை செய்கின்றனர். எனவே, அத்தகைய வர்த்தகர்களைக் கைதுசெய்ய சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மரக்கறிகளின் விலைகளை அறிவிப்புப் பலகையிலோ அல்லது காய்கறிகளின் நடுவிலோ, எடையுடன் காட்சிப்படுத்தவேண்டும் எனப் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## உவையள் கேக்காயினம்!

எங்கட அரசியல்வாதியளிட்ட ஒரு குணம் இருக்குது. எந்தெந்த விசயங்களுக்கு இவையள் குரல் குடுக்கவேண்டியிருக்கோ அதுகளைப் பற்றி மூச்சுக்கூட விடாயினம். ஆனால் தேவையில்லாத விசயங்களுக்காக வருசக்கணக்கா கத்திக்கொண்டிருப்பினம். அப்பிடி எங்கட அரசியல்வாதியள் கண்டுகொள்ளாத ஒரு விசயம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த உதயணன்ர சாவு. அவரை சி.ஐ.டிக்காரர் பிடிச்சு ஜெயிலுக்க வைச்சிருக்கேக்கையோ, இல்லாட்டி அவர் சிறைக்குள்ள செத்த பிறகோகூட நீதிகேட்டு ஒரு அரசியல்வாதியும் குரல் குடுக்கவேயில்லை.

காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த மாதிரி ஒரு விசயம் இந்தமாதம் 26ஆம் திகதி நடந்தது. இந்தமாதம் 26ஆம் திகதி தான் சிறைக்குள்ள உதயணன் எண்டு எல்லாரும் கூப்பிடுற சபாரட்ணம் நகுலேஸ்வரன் செத்தவர். அண்டைக்குத்தான் டக்ளஸ் தேவானந்தாவை சி.ஐ.டிகாரர் கைதுசெய்தவை. இது ரண்டும் ஒரேநாளில நடந்த வேற வேற சம்பவங்கள். ஆனால் ரண்டுக்கும் ஒரு தொடர்பும் இருக்கு. உதயணன் கனகாலமா கொழும்பில இருக்கிற கொம்பனி ஒண்டில வேலை செய்துகொண்டிருந்தவர் எண்டுதான் கன பேருக்குத் தெரியும். அதுக்கு முதல் அவர் எங்க இருந்தவர் எண்டு தெரியாது. அவர் இயக்கத்தில இருந்தவர் எண்டு ஆமி பிடிச்சு, களுத்துறை சிறைக்குள்ள இருந்தவர். உதயணன் சிறைக்குள்ள இருக்கேக்கதான் டக்ளஸ் அங்க போகேக்க, கொஞ்சக் கைதியள் டக்ளஸை மடக்கி, கம்பியால குத்தினவை. அதுக்குப் பிறகு டக்ளஸுக்கு ஒரு கண்ணில பெரிய பாதிப்பு. அந்தச் சம்பவத்தோட தொடர்புடைய 16 பேரில உதயணனும் ஒருத்தர். அவரை இயக்கமெண்டு நிரூபிக்கிறதுக்கு போதிய ஆதாரமில்லை எண்டதால, அவர் களுத்துறையில இருந்து வெளியில வந்திட்டார். எண்டாலும் டக்ளஸை சிறைக்குள்ள குத்திக் கொலை செய்ய முயன்ற 16 பேருக்கும் 2009க்குப் பிறகு ஒரு வழக்குப் போடுப்பட்டிருக்குது. ஏற்கனவே அதுசம்பந்தமான வழக்கில 6 பேரைத் தவிர மிச்சம் 10 பேரையும் நீதிமன்றம் விடுதலை செய்திட்டுது. மிச்சம் 6 பேருக்கும் சிறைத்தண்டனை விதிச்சு, அவைக்கும் தண்டனைக் காலம் முடிஞ்சுட்டுது. அதோட டக்ளஸும், தன்னைக் கொலைசெய்ய வந்தவையை மன்னிச்சு, அவையை வெளியில விடுங்கோ எண்டு அரசாங்கத்துக்கு அறிவிச்சுப் போட்டாராம். அதுக்குப் பிறகும் வழக்கு, விசாரணையள் தேவையில்லையே.

அந்த வழக்குக்குப் போகேல எண்டுதான், கொழும்பில வேலை செய்துகொண்டிருந்த உதயணனைக் கைதுசெய்து சிறையில அடைச்சிருக்கினம். சிறைக்குள்ள அவரை விசாரிக்கேக்க செய்த சித்திரவதையளாலதான் உதயணன் செத்தவர் எண்டு குடும்பத்தார் சொல்லுகினம். அடிக்கடி இப்ப சிறைக்குள்ள கைதியள் சாகிறது நடக்குது தானே. யாழ்ப்பாணத்திலையும் ஒரு கைதி, சிறைக்குள்ள வைச்சு அடிச்சதாலதான் கோமாவில இருக்கிறார் எண்டு வீட்டுக்காரர் குற்றஞ்சாட்டியிருக்கினம். அப்பிடி உதயணனுக்கும் ஏதும் அடி விழுந்ததால அவர் செத்திருக்கலாம். ஆனால் அதுக்கு முதலில உரியவை நீதிகேக்கோணும். உந்த எம்.பி. மார் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில 'நாயே, பேயே' எண்டு மாறி மாறி குரைக்காமல், இப்பிடி அவசியமான பிரச்சினையளுக்கு நீதி கேட்டால் தான் உண்மை என்னெண்டு தெரியவரும். ஆனால் உவையள் கேக்க மாட்டினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப் பிடிக்கவும். பிள்ளைகள்மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** வாழ்க்கைத்துணை உறவினர்கள் வருகையால் அதிகப்படியான செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணைப் பக்கபலமாக இருப்பார். தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலமாகும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால்பிரச்சினை ஏற்படக் கூடும். நண்பர்கள்மூலம் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும்.

**கன்னி:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**துலாம்:** மனதில்தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாகமுடியும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக் கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாக செல்லவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

# வேலன் சுவாமியுடன் மதகுருக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் பங்குபற்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய வேலன் சுவாமியை, கத்தோலிக்க மதகுருமார்கள் நேரில்சென்று நலம் விசாரித்தனர்.

போராட்டத்தின்போது பொலிஸாரால் வலுக்கட்டாயமாகக் கைதுசெய்யப்பட்டு, பின்னர்பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த வேலன் சுவாமி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அண்மையில் வீடு திரும்பியிருந்தார்.

இந்த நிலையில், கத்தோலிக்கக் குருக்களான அருட்தந்தை வசந்தன், அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா, அருட்தந்தை ஜேக்குமார் அடிகளார் ஆகியோர் நல்லூர் சிவ ஆலயத்துக்கு நேற்றுமுன்தினம் சென்று வேலன் சுவாமியைப் பார்வையிட்டு நலம் விசாரித்தனர். மதகுருமார்கள்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமைக்கு தமது கண்டனத்தையும் வெளியிட்டனர். (சு-27)

# கொடிகாமம் மரக்கறிச்சந்தை புதிய கட்டடத்துக்கு மாற்றம்!

கொடிகாமம், டிசெ.31

தென்மராட்சி கொடிகாமம் பொதுச்சந்தையின் மரக்கறி வியாபாரப் பகுதி புதிய கட்டடத்துக்குள் சம்பிரதாயபூர்வமாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாற்றப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், சந்தை வியாபாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இயங்குநிலை அற்றிருந்த கட்டடம் ஒன்றை சாவகச்சேரிப் பிரதேசசபையினர் மரக்கறி வியாபாரத்துக்கு ஏற்றவாறு புனரமைப்புச் செய்து கையளித்த நிலையில் மரக்கறி வியாபாரப்பகுதி புதிய கட்டடத்துக்குள் மாற்றப்பட்டு வியாபார நடவடிக்கை ஆரம்பித்துவைக்கப் பட்டுள்ளது. (ச-41-159)

# புதுவருடப் பூசை

யாழ்ப்பாணம்,டிசெ.31

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகையம்மன் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 7மணிக்கு புதுவருட சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (சு)



# திருவாசகப் பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ.31

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் திருவெம்பாவை விரத காலத்தை முன்னிட்டு வருடாந்த திருவாசகப் பெருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறைத் தலைவர் கலாநிதி.தி.செல்வமனோகரன் சிறப்பு ஆன்மிகவுரை ஆற்றுவார். பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நடராஜர் மற்றும் நாயன்மார்களின் திருவுருவங்களுடன் திருவாசக ஏடுகள் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும். இதன்போது மங்கள இசையும், அடியவர்களின் சிவபுராணம் ஓதலும் இடம்பெறும். ஊர்வலம் நிறைவுற்றதும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெறும். (ச-41-66)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ.31

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக வாராந்தத் திருவிளையாடற் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர்-38 அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்கச் சக்கரவர்த்தி சி.கா.கமலநாதனின் "கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்த படலம்" எனும் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச?41)

# துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி; பதிவுகள் மேற்கொள்ளலாம்

யாழ்ப்பாணம், டிசெ.31

தமிழ்மக்கள் கூட்டணியின் விளையாட்டுப்பிரிவும், மந்திகை இளம் சூரியன் இளைஞர் கழகமும் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தவுள்ள ஏலம் முறையிலான மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி விரைவில் நடைபெறவுள்ளது. போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் [illegible] ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும். மேலதிக விபரங்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மகேந்திரன் மயூரனின் 0772534001 எனும் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொள்ளமுடியுமென தமிழ்மக்கள் கூட்டணியின் விளையாட்டுப்பிரிவினர் அறிவித்துள்ளனர். (ச-41-66)

# தெய்வீகப்பேருரை

திருநெல்வேலி கரியபுலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் திருவாதிரை உற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும். அன்றைய தினம் மாழ்கழியில் திருவாதிரை எனும் தலைப்பில் காரை எம்.பி.அருளானந்தம் தெய்வீகப்பேருரை ஆற்றுவார். ஆலயத்தில் திருவெம்பாவை உற்சவம் தினமும் காலை 8 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் இடம் பெற்று வருகின்றது. (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# நோயை விடக் கொடியது பயம்!

மருத்துவம் என்பது புனிதமான சேவை. மனித உயிர்களோடு நேரடித் தொடர்புடைய, கடவுளுக்கு நிகராக மதிக்கப்படுகின்ற ஒரு துறை. ஆனால், அண்மைக்காலமாக இலங்கையில் -வடக்கு மாகாணம் உள்ளடங்கலாக மருத்துவமனைகளை நோக்கி எழும் விமர்சனங்களும், குற்றச்சாட்டுகளும் அந்தப் புனிதத் தன்மையின் மீது கரும்புள்ளிகளாக அமைந்துள்ளன. 'மருத்துவத் தவறுகளால் உயிரிழப்புகள்' என்ற குற்றச்சாட்டு ஒரு தொடர்கதையாகியுள்ளது. குற்றச்சாட்டுகள் எழுவதும் காலப்போக்கில் அவை மறைவதும் வழமையாகிவிட்ட நிலையில், அவை விட்டுச்செல்லும் வடுக்களும், சந்தேகங்களும் சமூகத்தின் ஆழ்மனதில் நிரந்தரமாகத் தங்கிவிடுகின்றன என்பது கசப்பான உண்மையாகும்.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுமி டினோஜாவின் உயிரிழப்பு மீண்டும் இந்தக் காயத்தைக் கிளறியிருக்கிறது. ஒரு நோயாளி சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் சென்று, சடலமாகத் திரும்பும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், உறவினர்களின் கதறல்களுக்குப் பின்னால் நியாயமான கேள்விகள் இருக்கின்றன. 'சிகிச்சை பலனளிக்கவில்லை'என்று மருத்துவர்கள் கூறுவதற்கும், 'பிழையான சிகிச்சையால் இறந்துவிட்டார்' என்று உறவினர்கள் கூறுவதற்கும் இடையில் பெரியதொரு இடைவெளி உள்ளது. இந்த இடைவெளியை நிரப்பவேண்டிய பொறுப்பு சுகாதாரத் துறைக்கும், அரசாங்கத்துக்கும் உண்டு. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் அந்தப் பொறுப்பு சரிவர நிறைவேற்றப்படுவதில்லை.வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு மருத்துவமனைகளில் இவ்வாறான சர்ச்சைகள் எழுந்தன. சில சம்பவங்கள் நீதிமன்றப்படிகள் வரை சென்றன. ஒவ்வொரு முறையும் போராட்டம் வெடிக்கும்போதும் அல்லது ஊடகங்களில் செய்தி வெளியாகும்போதும், உடனடியாகத் துறைசார் விசாரணை நடத்தப்படும், குழு நியமிக்கப்படும் என்ற வாக்குறுதிகள் அதிகாரிகளிடமிருந்து வருகின்றன. ஆனால், அந்த விசாரணைகள் முடிவடைந்தனவா? அவற்றின் அறிக்கைகள் என்ன சொல்கின்றன? யார் மீது தவறு? அல்லது உண்மையில் அது மருத்துவத்தவறு இல்லையா? என்ற உண்மைகள் ஒருபோதும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படுவதில்லை. இந்த மர்மமான மௌனமே மிகப்பெரிய ஆபத்தாக உருவெடுத்துள்ளது.

வெளிப்படைத்தன்மையற்ற இந்த நடைமுறை இரண்டு விதமான பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. முதலாவதாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்பதோடு, அவர்களின் சந்தேகம் ஆழமாக வேரூன்றிவிடுகிறது. ஒருவேளை மருத்துவர்கள் சரியான சிகிச்சையை அளித்திருந்தாலும், விசாரணை அறிக்கை வெளிவராத காரணத்தால், மக்கள் அதை மருத்துவத் தவறாகவே பார்க்கப் பழகிவிடுகிறார்கள். இது மருத்துவமனைகள் மீதான தேவையற்ற அச்சத்தை விதைக்கிறது. சாதாரண காய்ச்சலுக்குக் கூட அரச மருத்துவமனைக்குச் செல்ல மக்கள் அஞ்சும் நிலை உருவானால், அது பொதுச் சுகாதாரத்துறையின் தோல்வியாகவே அமையும்.இரண்டாவதாக, இது மருத்துவர்களையும், தாதியர்களையும் மோசமாகப் பாதிக்கிறது. எத்தனையோ மருத்துவர்கள் இரவு பகல் பாராது, மிகக் குறைந்த வசதிகளுடன் அர்ப்பணிப்பான சேவையை வழங்கிவருகின்றனர். ஆனால், ஓரிரு சம்பவங்களில் எழும் சந்தேகங்களும், அதற்கு நிர்வாகம் அளிக்கும் தெளிவற்ற பதில்களும் முழு மருத்துவச்சமூகத்தையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றன. இது நேர்மையான மருத்துவர்களுக்குக் கடும் மன உளைச்சலை ஏற்படுத்துவதுடன், அவர்களின் சேவை மனப்பான்மையையும் சிதைக்கக்கூடும். ஒவ்வொரு நோயாளியும் இறக்கும்போதும், தம்மைச் சமூகம் சந்தேகக்கண்ணோடு பார்க்குமோ என்ற பதற்றம் மருத்துவர்களுக்கு ஏற்படுவது ஆரோக்கியமான சூழல் அல்ல.


இந்தச் சிக்கலான நிலையை மாற்றியமைக்கவேண்டியது கட்டாயமாகும். மருத்துவத் தவறுகள் அல்லது சிகிச்சையின்போது ஏற்படும் மரணங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் வந்தால், அதனை விசாரிப்பதற்குச் சுயாதீனமானதும், துரிதமானதுமான பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவேண்டும். அந்த விசாரணைகள் மூடுமந்திரமாக இல்லாமல், குறித்த காலஎல்லைக்குள் முடிக்கப்பட்டு, அதன் முடிவுகள் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். ஒருவேளை மருத்துவர்கள் மீது தவறு இருந்தால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அதேவேளை, அது மருத்துவத்தவறு இல்லை, நோயின் தன்மை அல்லது தவிர்க்கமுடியாத காரணங்களால் அந்த இறப்பு நிகழ்ந்தது என்றால், அதையும் தகுந்த ஆதாரங்களுடன் விளக்கிச் சொல்லவேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு மன அமைதி கிடைக்கும். மக்களுக்கும் மருத்துவத்துறை மீதான நம்பிக்கை துளிர்க்கும். மருத்துவமனைகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தகவல் பரிமாற்ற இடைவெளியைக் குறைக்கவேண்டும். நோயாளிக்கு என்ன சிகிச்சை வழங்கப்படுகிறது, அதன் அபாயங்கள் என்ன என்பதை உறவினர்களுக்குப் புரியும் மொழியில், பொறுமையுடன் விளக்குவதே பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும். மருத்துவத்துறை என்பது நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்டுள்ளது. அந்த நம்பிக்கையைச் சந்தேகங்கள் அரித்துவிட அனுமதிக்கக்கூடாது. சந்தேகங்கள் என்ற நோயை 'வெளிப்படைத்தன்மை' என்ற மருந்து கொண்டே குணப்படுத்த முடியும். அதைச் சுகாதாரத்துறை நிர்வாகிகளும், கொள்கை வகுப்பாளர்களும் உணர்ந்து செயற்படவேண்டும். இல்லையேல், உயிரைக் காக்கும் மருத்துவமனைகள் மீதான மக்களின் பயம், நோயைவிடக் கொடியதாக மாறிவிடும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

### நாளொரு நல்வார்த்தை

மனித சுதந்திரத்தைப் பறித்து
தன்னடக்கத்தையும் ஊக்கத்தையும்
உண்டாக்கமுடியாது.

– ஆபிரகாம் லிங்கன்–




# 2025ஆம் ஆண்டில் 26 சட்டங்கள் நிறைவேற்றம்

**கொழும்பு,டிசெ.31**
**2025ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் ஆம் திகதி முதல் 2025ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரையான ஒருவருட காலப்பகுதியில் அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட 26 சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

உத்தியோகபூர்வ தரவுகளின்படி, ஆண்டின் இறுதிவரை சுமார் 23 சட்டங்கள் (Acts) சான்றிதழ் அளிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளன. 2025இல் நிறைவேற்றப்பட்ட சில முக்கியமான சட்டங்களின் பட்டியல் ஒதுக்கீட்டுச்சட்டம், குற்றச் செயல்களின் வருவாய்ச் சட்டம், கம்பனிகள் (திருத்தச்) சட்டம், இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம், சூதாட்ட ஒழுங்குமுறை அதிகாரசபைச் சட்டம், ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்கள் (நீக்கல்) சட்டம், தனிநபர் தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் உள்ளிட்டவை அடங்குகின்றன. (ச-இ)



## அரசியற்கட்சிகள் புதிதாக 5 பதிவு!

கொழும்பு, டிசெ.31
இலங்கையில் புதிதாக ஐந்து அரசியற்கட்சிகள் களமிறங்க அனுமதிபெற்றுள்ளன என்று தேர்தல் ஆணைக் குழுத் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
புதிய அரசியற்கட்சிகளை பதிவுசெய்வதற்காக கடந்த நாள்களில் தேர்தல் ஆணைக் குழு நடத்திய நேர்முகத் தேர்வுகளின் அடிப்படையில் தேவையான தகுதிகளைப் பூர்த்திசெய்ததால் அரசியற் கட்சிகள் ஐந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)



## மைல்கல்லை எட்டிய சுற்றுலாத்துறை!

கொழும்பு,டிசெ.31
இலங்கை சுற்றுலாத் துறை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மைல்கலை எட்டியுள்ளது.
2025ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2,333,797 ஆக உயர்ந்துள்ளது. இது இலங்கை சுற்றுலா வரலாற்றில் ஒரு வருடத்தில் பதிவான அதிகபட்ச வருகையாகும்.
இதற்கு முன்னர் 2018 ஆம் ஆண்டில் பதிவான 2,333,796 என்ற சாதனையை இந்த வருகை தற்போது முறியடித்துள்ளது. (ச-இ)

## விமானப்படை ஊடகப்பேச்சாளராக நளின் வேவாகும்புர

கொழும்பு,டிசெ.31
இலங்கை விமானப்படையின் புதிய ஊடகப் பேச்சாளராக குரூப் கெப்டன் நளின் வேவாகும்புர நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கடந்த 26ஆம் திகதி முதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# டித்வா பேரிடர் ஓய்வூதியம் வழங்கும் காலம் நீடிப்பு!

கொழும்பு,டிசெ.31
டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மீன்பிடி மற்றும் விவசாய சமூகத்துக்கான ஓய்வூதியம் வழங்குவதற்கான காலத்தை மேலும் நீடிக்க விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச்சபை தீர்மானித்துள்ளது. அனர்த்தம் காரணமாக தபால் நிலையங்களுக்குச் செல்வதில் ஏற்பட்டுள்ள சிரமங்களைக் கருத்திற்கொண்டு இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. அதன்படி, 2025 டிசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய ஓய்வூதியங்களைப் பெறுவதற்கான காலத்தை 2026 ஜனவரி 31 வரை மேலும் நீடிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை - மார்கழி 17
01.01.2026
சுபநேரம் : 12.28 - 01.58
ராகுகாலம் : 07.58 - 09.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடும் மக்களின் உணர்வை நையாண்டி செய்வதை கைவிடுக!

## தையிட்டி காணி உரிமையாளர்கள் அர்ச்சுனா எம்.பி.க்கு பதிலடி

கொழும்பு, டிசெ.31

சட்டவிரோத தையிட்டி விகாரை தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். எங்கள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காவிடினும் கூட போராடும் மக்களை நையாண்டி செய்வதைத் தவிர்க்கவேண்டும் என்று தையிட்டிக் காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர். யாழ்.ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
நீங்கள் எங்கள் காணிகளை அடாத்தாக பிடித்து வைத்துள்ளீர்கள். இந்த நிமிடம் வரையும் இந்த விவகாரம் குறித்து எங்களுடன் யாரும் கதைக்கவில்லை. சட்டவிரோத தையிட்டி விகாரை தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்துவருகிறோம். ஒருவகையில் மக்களின் காணி என்று ஏற்றுக்கொள்கின்ற அமைச்சர் தற்போது மாற்றுக்காணி என்று கதைக்கிறார். நாங்கள் மாற்றுக்காணியையோ நஷ்ட ஈட்டையோ கேட்க வில்லை. இவர்கள் மாற்றுக்காணி என்று எதைச் சொல்லுகிறார்கள் மாற்றுக்காணியை எங்கு வழங்கப்போகிறார்கள்? இவர்கள் காக்கைதீவிலும் மாற்றுக்காணியை வழங்கக்கூடும். அங்கு வாழமுடியாது. காணிகளை இழந்த எங்களுடன் கலந்துரையாடாமல் புத்த பிக்குவுடன் கலந்துரையாடி காணிகளை விடுவிக்கப் பேசுகிறார்கள். இலங்கை சுதந்திரம் அடைய முதல் இருந்த காலத்தில் குறித்த தையிட்டிக்கான உறுதி எம்மிடம் உள்ளது. தையிட்டியில் போராடும் மக்களிடம் கள்ள உறுதியே உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா சொன்னதை ஏற்கமுடியாது. போராடும் மக்களை நையாண்டி பண்ணவேண்டாம். முடிந்தால் தையிட்டியில் போராடுபவர்களின் காணி உறுதி பொய் என்பதை நிரூபிக்கட்டும் - என்றனர். (ச-26)



வேலணைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 21 மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-9)

## 2 மாத மின் கட்டணச்சிட்டை ஒரேதடவையில் திணிப்பு!

### பாவனையாளர்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

மின் வாடிக்கையாளர்களுக்கு இரு மாதங்களுக்கான மின் மாதாந்த பாவனைக் கட்டணச்சிட்டைகள் ஒரே தடவையில் வழங்கப்பட்டு வருகின்றது. டித்வா புயல் காரணமாக நவம்பர் மாத மின் பாவனை கணக்கெடுக்கப்படாமல் டிசெம்பர் மாதத்துடன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு இரு மாதங்களுக்குரிய கட்டணம் ஒரே தடவையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஒரே தடவையில் இருமாதங்களுக்குரிய கட்டணம் அனுப்பப்பட்டு வருவதால் பாவனையாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ச-9)



## இடரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாணவியின் உண்டியல் பணம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் தான் சிறுகச் சிறுக சேகரித்த உண்டியல் பணத்தை டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் கையேட்டைத் தயாரிப்பதற்காக வழங்கியுள்ளார்.

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் கையேடுகளைத் தயாரிப்பதற்கான நிதிச்சேகரிப்பில் வெண்கரம் அமைப்பின் தன்னார்வலர்கள் ஈடுபட்டு வந்தனர்.

அந்தவகையில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் தரம் 7இல் கல்விபயிலும் மாணவியான பு.சர்ஜனா என்ற சிறுமி, சிறுகச் சிறுக சேகரித்த உண்டியல் பணத்தை வெண்கரம் அமைப்பிடம் வழங்கியுள்ளார். (ச-27)

## 785 வழித்தடத்தில் இ.போ.ச.சேவை சீரில்லை!

### பயணிகள் மீது சீறிப்பாயும் சாரதி பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்ப்பாணம் - காரைநகர் வழித்தடத்தின் 785 பேருந்துச்சேவை உரிய நேரத்துக்கு இடம்பெறுவதில்லை என்றும் குறித்த வழித்தடப் பேருந்தில் கடமையில் ஈடுபடும் சாரதி ஒருவர் பயணிகள்மீது சீறிவதால் பயணத்தின்போது பெரும் அசௌரியங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்றும் பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த 785 வழித்தடத்தில் குறைந்தளவு இ.போ.ச. பேருந்துகளே சேவையில் ஈடுபடுகின்றன. அவையும் உரிய நேரத்தில் ஈடுபவதில்லை. இதனால் நெருக்கமாகப் பயணிகள் ஏற்றப்படுகின்றனர். தரிப்பிடங்களில் அதிக பயணிகள் காத்திருந்தால் மட்டுமே பேருந்தைச் சாரதி நிறுத்தி ஏற்றிச்செல்கின்றார்.

அத்துடன் இந்தச் சேவையில் கடமையாற்றும் சாரதி ஒருவர் பயணிகள்மீது சீறிப் பாய்வதுடன் தகாத வார்த்தைகளையும் பிரயோகிக்கின்றார்.

இந்த வழித்தடத்தில் தனியார் பேருந்துகளும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே வழங்குகின்றன. இதனால் யாழ்ப்பாணத்துக்குத் தினமும் பயணிக்கும் அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்டோர் உரிய நேரத்துக்குக் கடமைக்குச் செல்ல முடியாதுள்ளனர்.

எனவே 785 வழித்தடத்துக்கு சீரான பேருந்துச் சேவைகளை வழங்குவதுடன், சாரதிகளின் செயற்பாடுகளையும் போக்குவரத்துச்சபையின் காரைநகர் டிப்போ அதிகாரிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-கு)

## சமையலாளர் தேவை

சுண்டிக்குளியில் ஆறு பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு 3 வேளை உணவை சமைப்பதற்கு சமையலாளர் தேவை. சமைப்பதற்கு தேவையான பொருட்களை தாமே சென்று கடையில்வாங்குதல் வேண்டும்.
நேர்மையானவராகவும், துப்பரவானவராகவும், சொல்லும் வேலைகளை கேட்டு செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
சம்பளம் நாள் ஒன்றிற்கு - 2000/-

தொடர்புகளுக்கு:- 076 329 4813

(CS/60332) J-1

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 08 . 01 . 1936



மறைவு 28 . 12 . 2025

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட

### திரு அப்பாத்துரை பஞ்சலிங்கம்

(ஓய்வுநிலை அதிபர் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

அவர்களின் இறப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீமங்கள மகா காளி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் - குளப்பிட்டி
அருள்மிகு ஸ்ரீ மங்கள மகாகாளி அம்மன் தேவஸ்தானம்.

இல.11/3, குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(CS 28766)A

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 04 . 1974



இறப்பு 30 . 12 . 2025

### செல்வி ஆன் பிரியசாந்தினி ஜோசேப்

தெஹிவளையைப் பிறப்பிடமாகவும், பெரிய விளான், இளவாலை மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஆன் பிரிய சாந்தினி யோசேப் நேற்று (30.12.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான யோசேப் - மேரி யோசேப்பின் மாசில்லா தம்பதியரின் சிரேஷ்ட மகளும், காலஞ் சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை-அன்னம்மா மற்றும் பிலிப்பையா - அன்னேசம்மா தம்பதியர்களின் அன்புப் பேர்த்தியும், பிரதீபா காயத்திரியின் அருமைச் சகோதரியும், வருண், சுருதி ஆகியோரின் பெரிய தாயும், கஜபதியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.12.2025) புதன்கிழமை 12/1 நெல்லியடி ஒழுங்கை, கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மு.ப. 11 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இறுதித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து பி.ப.12.30 மணியளவில் 5ம் கட்டை, பெரியவிளான், இளவாலையில் உள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இளவாலை புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 12/1, நெல்லியடி ஒழுங்கை, கொக்குவில்.

தகவல்: சகோதரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையான அழைப்பு இல்லையேல் அபிவிருத்திக் கூட்டம் புறக்கணிப்பு


## நல்லூர் பிரதேசசபை தீர்மானம்

நல்லூர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டங்களை முற்றாகப் புறக்கணிக்க நல்லூர் பிரதேசசபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

நல்லூர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் பங்கெடுப்பதற்கு நல்லூர் பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்காத பட்சத்திலேயே அந்தக் கூட்டங்களை முற்றாகப் புறக்கணிப்பதென நல்லூர் பிரதேச சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது நல்லூர் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் கொண்டு வந்த தீர்மானத்தைச் சபை உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். (ம-66-26-20)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 08.01.1936 மறைவு 28.12.2025

அமரர்

**அப்பாத்துரை பஞ்சலிங்கம்**

(போசகர் - கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்,
ஓய்வுநிலை அதிபர்- யாழ். இந்துக் கல்லூரி,
கொக்குவில் இந்துக் கல்லூரி)

யாழ்ப்பாண கல்வி வரலாற்றில் தனது இறுதி மூச்சு வரை அர்ப்பணிப்பான சேவையினை பல்வேறு பரிமாணங்களில் வழங்கி தனக்கென ஓர் இடத்தினை தடம் பதித்தவர் எமது மதிப்பிற்குரிய பேராசான் ஆவார்.

கல்லூரிகளின் இடும் அவசியத்தை உணர்ந்து முன்பள்ளி கல்விக்கென தன்னை முழுமையாக ஈடுபடுத்தி பல்லாயிரணக்கணக்கான மாணவச் செல்வங்களின் வாழ்விற்கும் சாதனைகளுக்குமான அறிவினை வழங்கியவர் எம் ஆசான் ஆவார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலம் தொட்டு வளர்மதியின் சமூகப்பணியுடன் தன்னை இணைத்துக்கொண்ட அவர் தனது ஓய்வின் பின்னரும் வளர்மதியுடன் இணைந்து சமூகப்பணிகளை ஆற்றி இறுதிவரை போசகராகவும் வளர்மதி ஆங்கிலப்பிரிவின் தொடக்க காலம் முதல் இறுதி வரை கௌரவ தலைவராகவும் பணியாற்றினார்.

அவர் பல்வேறு கல்வி, சமூக அமைப்புக்களுடன் இணைந்து இறுதி வரை பெரும் பணியாற்றிய மகத்தான மாமனிதரது மறைவு எமது சமூகத்திற்கு பேரிழப்பாகும்.


அன்னாருக்கு எமது இறுதி அஞ்சலியினை தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும் சனசமூக நிலையமும்**
**வளர்மதி நிறைவாழ்வகம்**
**வளர்மதி மகளிர் அமைப்பு**

(CS 60330 ) A

## இதய அஞ்சலி



தோற்றம் 08.01.1936 மறைவு 28.12.2025

அமரர்

**அப்பாத்துரை பஞ்சலிங்கம்**

(ஸ்தாபகர், தலைவர் - கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்.
ஓய்வுநிலை அதிபர்- யாழ். இந்துக் கல்லூரி,
கொக்குவில் இந்துக் கல்லூரி)

கொக்குவில் இந்துக்கல்லூரியின் மாணவனாக, ஆசிரியராக, அதிபராக தசாப்தகாலங்கள் பணிபுரிந்து மாணவர்களதும் பாடசாலையினதும் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி எமது கல்லூரிக்கென தனித்துவமான அங்கீகாரத்தை பல்துறைகளிலும் பெற்றுத்தந்தவர்.

சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் தன் பணியிலிருந்து ஓய்வு பெறாது இறுதிவரை கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்சங்கத்தின் தலைவராக பல தடவைகள் பணியாற்றி அதன் வெளிநாட்டு கிளைகளுடனும் இணைந்து பல பௌதீக வளங்களைப் பெற்றுத்தந்ததுடன் கல்லூரியின் பெரும் வளர்ச்சிக்கு பணியாற்றியவர்.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் நீண்டகால அபிவிருத்திக்கும் நிலைத்திருப்பதற்கும் பௌதீக வளங்களும் பொருளாதாரமும் மிகமிக அவசியம் என்பதை முன்னுர்ந்து 200.... "கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்சங்க நம்பிக்கை நிதியம்" என்னும் பெயரில் ஓர் நம்பிக்கை நிதியத்தை உருவாக்கி அதன் தலைவராக இறுதி மூச்சுவரை நீண்ட காலம் பணியாற்றி பல பௌதீக வளங்களையும் பல மில்லியன் கணக்கான நிலையான வைப்புக்களையும் வைப்பிலிட்டு மாணவர்களுக்கான பல புலமைப் பரிசில்களையும் துறைசார் ரீதியில் உருவாக்கியவர் எம் பேராசான்.


எந்தவிடயம் ஆனாலும் காலம் தாழ்த்தாது செயலில் இறங்குபவராகவும் எதனையும் முதல் செய்யவேண்டும் என்ற உணர்வு கொண்டவராகவும், பல புதிய தேடல்களின் புதியவற்றை உருவாக்கியவரும் எம் ஆசான் ஆவார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கொக்குவில் இந்துக்கல்லூரி**
**பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்**

(CS 60330 ) A

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு : 12.09.1982 இறப்பு : 10.01.2025

**அமரர் ரவீந்திரன் சுதாகர்**


(R.S. ரெக்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்)

அன்பின் ஊற்றாக
ஆளுமையின் சிகரமாக
பாசத்தின் பிறப்பிடமாக
எமையெல்லாம் வழிகாட்டி
ஆளாக்கிய தெய்வம்
மின்னாமல் முழங்காமல்
பெருமாளின் பாதார விந்தங்களை
அடைந்து ஓராண்டு ஆனதுவோ
ஓம் சாந்தி

குடும்பத்தினர்.

(CS/60329) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 11 . 1932 மறைவு 28 . 12 . 2025

**மாணிக்கர் கந்தசாமி**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம், முல்லைத்தீவு)

தம்பக்கடவை, சந்நிதி வீதி, இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கர் கந்தசாமி அவர்கள் கடந்த (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கர் - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - நல்லம்மாவின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கதிராசிப்பிள்ளை, பொன்னம்மா, சிதம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தினி, மாணிக்கவசந்தினி (முன்னைநாள் கணக்காளர், யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்), சுகந்தினி, கணேசமூர்த்தி (முன்னைநாள் கணனி விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்), சிவச்செல்வி (முன்னைநாள் உபதபாலதிபர், வளளாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமாரவேல், சவுந்தரராஜன், கணேசலிங்கம் (ஓய்வுநிலை சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சுகலியா (Optician, கனடா) ஆகியோரின் அன்பு மாமாவும், மதீபன், மதீரன், வேணுகரன்-பிரசாந்தினி, அகிலேசன்-ராகவி, நிருத்திகா,அகரன், பிரவீன், கவீன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2025) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
மகன் : +1 437 970 2014
அகிலேசன் : +94 77 831 1676
வசந்தினி : +44 7376 101433
சிவச்செல்வி: +44 7958 375787

சந்நிதி வீதி,
தம்பக்கடவை,
இடைக்காடு, அச்சுவேலி.

(CS/30920) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
08.01.1936

மறைவு
28.12.2025

உரும்பிராய் கிட்ஸ் பார்க் முன்பள்ளியின் தலைவர்

### அமரர் அப்பாத்துரை பஞ்சலிங்கம்

எங்களை வழிநடத்தி ஒளியூட்டியவர்
எல்லா நிழலிலும் நமக்குப் பேரொளியாய் இருந்தவர்
சிறு பிள்ளைகளின் புன்னகையில்
தன் வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டவர்
தன் பணி முடிந்ததென்று ஓய்வெடுக்கச்
சென்றுவிட்டார்....
என்றும் உங்களுடைய வழிகாட்டலுடன்
நாம்....

என்றும் உங்கள் நினைவுகளுடன்

உரும்பிராய் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்
உரும்பிராய்
கிட்ஸ் பார்க் முன்பள்ளி ஆசிரியர்கள்,
நிர்வாக உத்தியோகத்தர்கள், CALSDA ஆசிரியர்கள்

(CS 60330) A

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
08.01.1936

மறைவு
28.12.2025

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் முன்பள்ளியின் தலைவர்

### அமரர் அப்பாத்துரை பஞ்சலிங்கம்

அறிவும் அன்பும் கலந்து நடந்த அருமைத் தலைவர்
எம்முடைய பெருமையின் வடிவம் அவர்
ஒரு சொல்லால் உற்சாகம், ஒரு பார்வையில்
நம்பிக்கை ஊட்டி எம்மை வழிநடத்தினீர்
இறுதிவரை உமது பணியை செய்துவிட்டு
நிரந்தமாய் உறங்கியது ஏனோ?

உங்கள் பிரிவால் துயருறும்


உரும்பிராய் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்
திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் முன்பள்ளி
இயக்குனர், ஆசிரியர்கள்,
நிர்வாக உத்தியோகத்தர்கள், CALSDA ஆசிரியர்கள்.

(CS 60331) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 02 . 1943

மறைவு
28 . 12 . 2025



### சின்னத்துரை புஷ்பரத்தினம்

**(வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்கள ஓய்வுநிலை உத்தியோகத்தர்)**

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், மூளாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை புஷ்பரத்தினம் (வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்கள ஓய்வுநிலை உத்தியோகத்தர்) அவர்கள் கடந்த 28.12.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (சொக்கர்) - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், லீலாவின் அன்புக் கணவரும், பாலகிருஷ்ணனின் அன்புச் சகோதரனும், சுகிர்தா (பிரான்ஸ்), சுபாசினி (ஆசிரியர், வட்டு மேற்கு அ.மி.த.க. பாடசாலை), சுதர்சன் (லண்டன்), Dr.சுதாகரன் (பிரதேச வைத்திய அதிகாரி, இளவாலை), பிரதீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டுபாஸ்கரன் (பிரான்ஸ்), மதனமோகன் (ஓய்வுநிலை ஆசிரியர்), சுகந்தினி (லண்டன்), மலர்மதி (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி - ஊர்காவற்றுறை), சுதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டர்சிகா , அஸ்வின், அஸ்விதா (பிரான்ஸ்), நிதர்சனா, பிரம்மகீதன் (மாணவர்கள் - விக்டோறியாக் கல்லூரி), அஸ்னா, அஞ்சனா, அநாஸ் (லண்டன்), கானுசன், மிதுர்னிகா (மாணவர்கள் - யாழ்ப்பாண இந்துக் கல்லூரி), சனோவியா, திபிக்கா, சேயோன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.01.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மூளாயில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
Dr.சுதாகரன் 077 071 2340
மலர்மதி 077 153 2066
சுபாஷினி 076 616 5032

பிள்ளையார் கோயிலடி,
மூளாய் மத்தி, மூளாய்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 02 . 1941

மறைவு
29 . 12 . 2025



### அப்பாத்துரை தங்கலிங்கம் (செல்லத்துரை)

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மூத்த விநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை தங்கலிங்கம் (செல்லத்துரை) அவர்கள் கடந்த (29.12.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - சின்னத் தங்கச்சி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், தம்பிராசா - ரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திகழ்மதியம்மாவின் பாசமிகு கணவரும், கனகலிங்கம் (சூரியன் - USA - Engineer, Peradeniya University - 1994) பாசமிகு தந்தையும், குமுதினியின் அன்பு மாமனாரும், கவிகேசா, கேசவி ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், தங்கராசா, தங்கநாயகம், தங்கவேல் (பொன்னுத்துரை) மற்றும் தங்கராணி, தம்பிராசா (கனடா), தங்கச்சியம்மா (ராணி) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஞானராசா, கேதீஸ்வரன் மற்றும் ஆனந்தராசா, தர்மராசா, மங்கலேஸ்வரி, இந்திராணி, இரத்தினராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
021 225 6887

மூத்த விநாயகர் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

(CS/60328) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு வழங்கிய இலக்கைவிட அதிகமான சுங்க வருமானம்

கொழும்பு, டிசெ.31
அரசாங்கத்தால் சுங்கத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த வருமான இலக்கைவிட அதிக வருமானம் இந்த ஆண்டில் பெறப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இதுவரையிலான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 491 பில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது என்று சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்தால் சுங்கத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த வருமான இலக்கு 2 ஆயிரத்து 115 பில்லியன் ரூபாவாகும். வருமான இலக்கைத் தாண்டியுள்ள அதேவேளை, வருமான வளர்ச்சி வேகமும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு ஆயிரத்து 531 பில்லியன் ரூபா வருமான இலக்காகும். கடந்த ஆண்டு வருமான இலக்கைவிட சுமார் 4 பில்லியன் ரூபா மாத்திரமே கூடுதல் வருமானமாகக் கிடைத்தது. இந்த ஆண்டு மோட்டார் வாகன இறக்குமதி உள்ளிட்ட காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டே எமக்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

வரி வருமானம் இழக்கப்படக்கூடிய காரணிகளை கண்டறிந்து அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கேற்ப இலங்கையில் சுங்க வரலாற்றில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள அதிகூடிய வருமானமாக இந்த ஆண்டு வருமானம் பதிவாகியுள்ளது-என்றார். (எ-இ)




## விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.31
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின்கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் (NYQ04) கற்கைநெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிகள் மாவட்ட அலுவலக கணினிப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரி 16 - 25 வயதுக்கு உட்பட்டவராகவும், க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்கவேண்டும். விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியூ கண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 0212222383 அல்லது 071 4553772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளமுடியும். (க)

## திருவாசக விழா

யாழ்ப்பாணம், டிசெ.31
மகிமைமிக்க மார்கழி மாதத்தில் 'மாணிக்கவாசகப் பெருமான் பாடிய திருவாசகத்தின் சிறப்பைப் போற்றுவோம்' எனும் பொருளில் திருவாசக விழா நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனை திருவாசக அரங்கத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சிட்னி, அவுஸ்திரேலியாவின் இதய மருத்துவ நிபுணர் வை.மனோமோகன் சிவகௌரி தம்பதியர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இசை ஆசிரியர் திருமதி புஷ்பலட்சுமி உமாசங்கர், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கு.அனுஷன், தர்மிதா ஆனந்தரட்ணம் மற்றும் சிட்னி, அவுஸ்திரேலியாவின் மருத்துவக் கலாநிதி சிவரதி கேதீஸ்வரன் ஆகியோர் திருவாசக அர்ப்பணம் செய்யவுள்ளனர்.

தொடர்ந்து திருமதி துஸ்யந்தி சுகுணனின் நெறியாள்கையில் உடுவில் நாட்டிய கலாகேந்திரா குழுவினர் திருவாசக நாட்டிய அர்ப்பணம் இடம்பெறும். (ச-41-159)



வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் ஒளிவிழா சபையின் தலைமை அலுவலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-41-17)

## ஜோன்ஸ்டனின் மகன் கைது!

கொழும்பு, டிசெ.31
முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் ஜொஹான் பெர்னாண்டோ பொலிஸ் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

லங்கா சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி உட்பட பல வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## வடக்கு கூட்டுறவு அமைச்சின் புதிய அலுவலகம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31
வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, தொழிற்றுறையும், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சின் புதிய அலுவலகம், இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அடப்பன் வீதி, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தொழிற்றுறைத் திணைக்களத்தில் திறக்கப்படவுள்ளது.

அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், விருந்தினர்களாகக் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர்,வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், வடக்கு மாகான பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் ஆகியோர் கலந்துகொள்வர்.

நிகழ்வில் அமைச்சின் பெயர்ப்பலகை திரைநீக்கம், அலுவலகத் திறப்பு, பொம்மலாட்டம், தேசிய ரீதியில் விளையாட்டுக்களில் சாதனை படைத்தவர்களுக்கான கௌரவிப்பு உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறும். இதுவரை காலமும் தனியார் கட்டத்தில் இயங்கிய குறித்த அமைச்சு, புதிதாக அமைக்கப்பட்ட கட்டத்தொகுதியில் இனி இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலீதா மறைவு

பங்களா தேஷின் முதலாவது பெண் பிரதமர் கலீதா சுகவீனம் காரணமாக நேற்றுக் காலமானார். கடந்த பல வாரங்களாக உடன்நலக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருந்த அவர், நீண்ட நாள் சிகிச்சைகளைத் தொடர்ந்தே உயிர்காப்பு முயற்சிகள் பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார். கலிதாவின் மறைவைத் தொடர்ந்து, பங்களா தேஷில் மூன்று நாள்கள் துக்கதினம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 01 . 1936



மறைவு 28 . 12 . 2025

### திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம்

(ஓய்வுநிலை அதிபர்–யாழ் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி)
(தலைவர், நிறுவுனர்-உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி ஸ்மார்ட் கிட்ஸ்)

கொக்குவிலை பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்கள் கடந்த 28.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை-இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகுரு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், நிரஞ்சன் (கனடா), நிருபா (ஆசிரியர்-அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பிரஷாந்தி (கனடா), அருந்தவம் (ஆசிரிய ஆலோசகர்-வலிகாம கல்வி வலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நவநீத் (கனடா), பிரஜித் (கனடா), மதுரா (மாணவி-விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), ரூபிகா (மாணவி -யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் செல்வநாயகி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, சற்குணதேவி, சிவபாதசுந்தரம், தனலங்காதேவி மற்றும் சிவலோகநாதன், சிவானந்தன், சாந்தாதேவி, குகலோசனாதேவி, மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2025) புதன்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆரம்பித்து தொடர்ந்து பூதவுடல் உரும்பிராய் கிட்ஸ் பார்க்கில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.
076 8257 881, 076 3989 321

(CS 28757) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 06 . 1938



மறைவு 29 . 12 . 2025

### திருமதி சபாரத்தினம் அகிலேஸ்வரி (அகிலமக்கா)

கரவெட்டி மத்தி, பெரியதோட்டத்தைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி கிழக்கு தல்லையப்புலம் வீரபத்திரர் பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரத்தினம் அகிலேஸ்வரி (அகிலமக்கா) அவர்கள் கடந்த (29.12.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திதில்லையம்பலம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிலம்பு கதிர்காமு - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கதிர்காமு சபாரத்தினத்தின் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) பாசமிகு மனைவியும், சிவபாக்கியம், காலஞ்சென்ற புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பார்பதியம்மா, காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கே.சி. மகாதேவா, கந்தப்பு, தம்பையா மற்றும் செல்லம்மா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கேசவன் (இலண்டன்), வாசவன் (இலண்டன்), ராகவன் (சமுர்த்தி முகாமையாளர், பிரதேசசெயலகம், தென்மராட்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வமலர் (இலண்டன்), ரூபநிதி (இலண்டன்), கார்த்திகா (நூலகர், பிரதேசசபை, கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ராகுல் (இலண்டன்), யோகராம் (இலண்டன்), அபிநயனி (இலண்டன்), சாயிராம் (இலண்டன்), அட்சயா (மாணவி, யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-12-2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 02.00 மணியளவில் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


கரவெட்டி கிழக்கு, தல்லையப்புலம்,
வீரபத்திரர் பத்திரகாளி கோவிலடி (CS/46812) J-1

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை மயில்வாகனம் (வயவையூரான்)

(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்துச் சபை - வடக்கு சாலை பரிசோதகர்)



வசாவிளானைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மயில்வாகனம் அவர்கள் கடந்த (29.12.2025) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், அருந்ததியின் பாசமிகு கணவரும், கவிதா (இ.போ.ச - (வ)), கண்ணதாசன் (ஜேர்மன்), விஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹரன் (லிட்டில் லஜன் ஏரிய Sale Manager), பௌசிகா (ஜேர்மனி), மயூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஷாதனா (இலங்கை), கிருத்திக்ஷன் (இலங்கை), கிஷானி (ஜேர்மன்), ஹரிஸ் (ஜேர்மன்), கருண் (ஜேர்மன்), அதர்வா (பிரான்ஸ்), கவின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற புவனேந்திரன் (ஓய்வுபெற்ற சாரண ஆணையாளர்) மற்றும் தெய்வேந்திரன் (சித்த ஆயுள்வேத வைத்தியர்), குலேந்திரன் (ஓய்வுபெற்ற மின்மாணி வாசிப்பாளர்), சறோஜினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2025) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ந.ப 12.00 மணியளவில் நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 05.01.1940 மறைவு 29.12.2025

நீர்வேலி

(CS/60335) J-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.12.2025
புதன்கிழமை

கண் ஒரு உறுப்பு,
பார்வை ஒரு
கலை.

- மார்ஷ்

புதன்
பொய்கை

# வாடகை வீடுகளில் வாடும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள்....



■ பவித் அருள்வசந்



உணவு, உடை, உறையுள் என்பன மனிதனின் அத்தியாவசியத் தேவைகள் என்பது யாவரும் அறிந்ததே! அத்தகைய மூன்றும் அனைவருக்கும் சமனாகக் கிடைப்பதில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டுவரும் வெளிமாவட்ட மாணவர்கள் பலர் ஆடை என்ற விடயத்தைத் தவிர உணவு மற்றும் தங்குமிடங்களில் சில சவால்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. உணவினைக் காட்டிலும் தங்குமிடப் பிரச்சினையானது அதிகம் சவால் மிக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழக விடுதிகள் கிடைப்பதில்லை. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் வாழும் மாணவர்களுக்கும், பெற்றோர் அரசாங்க வேலையில் பணியாற்றும் வெளிமாவட்ட மாணவர்களுக்கும், அதீத சம்பளம் பெறும் பெற்றோர் உள்ள மாணவர்களுக்கும் இத்தகைய பல்கலைக்கழக விடுதிகள் கிடைப்பதில்லை.

இதனைத்தவிர விடுதிகள் வழங்கப்படும் மாணவர்கள் முதலாம் வருடமும், இறுதி வருடமும் மாத்திரமே விடுதிகளில் வசிக்கிறார்கள். ஏனைய இரண்டு வருடங்களும் பல்கலைக்கழக வளாகத்தைச் சூழவுள்ள வாடகை வீடுகளிலேயே வசித்துவருகின்றார்கள்.

வாடகை வீடுகளில் அதிகாலையில் குளிப்பதில் தொடங்கும் துன்பம் இரவில் துயிலும் வரை நீள்கின்றது. காலை எட்டு மணிக்கு விரிவுரைகளுக்குச் செல்வதற்குத் தயாராகும் மாணவர்கள் காலைக் கடன்களை நிறைவேற்றுவதற்காக அதிகாலை 5.30 மணியிலிருந்து வரிசையாக நிற்கவேண்டியுள்ளது. ஏனெனில் ஒரு வீட்டில் 4 அல்லது 5 மாணவர் குழுமங்களாக, பதினைந்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் வசிக்கின்றார்கள். அத்தகைய வாடகை வீடுகளில் ஒரு கழிப்பறையும், ஒரு குளியலறையும் மாத்திரமே காணப்படுகின்றது. இதுகுறித்து உரிமையாளர்கள் கவனம் செலுத்துவதில்லை.

அநேகமாக வாடகைக்குக் கொடுக்கப்படும் வீடுகளிலேயே உரிமையாளர்களும் வசிக்கின்றார்கள். அவ்வாறான வீடுகளில் மாணவர்கள் மாலை 6:00 மணிக்கு முன்னர் வீடுகளுக்குத் திரும்பவேண்டிய நிலையும், காலையில் 7.30 மணிக்குப் பின்னரே கதவுகள் திறந்து வெளியில் வரக்கூடிய நிர்ப்பந்தங்களும் காணப்படுகின்றன. குறிப்பாக விளையாட்டுத்துறை சார் பயிற்சிகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கும், கள ஆய்வுகளுக்காக நீண்ட தூரம் செல்லும் மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுவதற்குச் செல்லும் மாணவர்களுக்கும் இத்தகைய விடயமானது மிகப்பெரும் சவாலாகவே உள்ளது.

மேலும் உரிமையாளர்கள் தமது பாதுகாப்புக்காக நாய்களை இரவில் நடமாடவும் விடுகிறார்கள். இதனால் அவை, சில மாணவர்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளன. அத்துடன் கடினமான புறச்சூழல் காரணிகளால் பாதிக்கப்படும் மாணவர்களுக்குச் சரியான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாதபோதும், தாம் தங்கியுள்ள வீடுகளின் வாடகைப்பணம் அதிகமாக உள்ளமையும் அவர்களுக்கு அதிக நெருக்கடிகளை உருவாக்குகின்றது.

மேலும் விரிசல்கள் நிறைந்த வீட்டுக்கூரை, பாம்பு, எலி, கறையான் போன்ற பிராணிகள் வீட்டுக்குள் நுழைதல், வீட்டின் நிலமானது சமதரையாக இல்லாமை மற்றும் மழையின்போது நீர் தேங்குதல் போன்ற சவால்களையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. அத்துடன் திண்மக் கழிவகற்றலினை முறைப்படி முகாமை செய்யமுடியாத வீட்டுச்சூழலும் மாணவர்களுக்கான பிரதான பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

இவற்றைக் காட்டிலும்சில வீடுகளில் மின்சார அடுப்புகள் பாவிக்கத் தடை, சில வீடுகளில் சொந்தமாகக் கதிரை, மேசை போன்றவற்றினைக் கொள்வனவு செய்து பாவிக்கத் தடை, ஆடைகளை உலரச்செய்யும் கொடி கட்டத்தடை, ஆணி அடிக்கத் தடை, அதிக பொருள்கள் வைத்திருக்கத் தடை, சில வீடுகளில் சக நண்பர்களோ, குடும்பத்தவர்களோ வருவதற்குத் தடை எனத் தடைக்கு மேல் தடை போட்டு, ஒரு சிறைச்சாலை வாழ்வுக்குள் மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தினமும் குடிநீரினைப் பல்கலைக்கழகம் சென்றே பெறவேண்டும், உரிமையாளர்கள் வாடகைப் பணத்தினைத் தங்களுக்கு ஏதுவான வகையில் நினைத்த நேரத்தில் அதிகரிக்கின்றனர். இதனை எதிர்த்து மாணவர்கள் கேள்வி கேட்கும் போது வீட்டை விட்டு அகலுமாறு அச்சு[illegible]கின்றனர். இவ்வாறு [illegible] எத்தனையோ துன்பங்கள் மாணவர்களைச் சூழ்ந்து காணப்படுகின்றன. இத்தகைய இன்னல்களினை எதிர்கொண்டவாறே தம்முடைய பட்டப்படிப்பினை மாணவர்கள் மேற்கொள்கிறார்கள்.

இத்தகைய பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும். பல்கலைக்கழகங்கள் அனைத்து மாணவர்களுக்குமான விடுதிகளை வழங்குவதற்கான வசதிகளை அரசாங்கத்துடன் இணைந்து மேற்கொள்ளவேண்டும்.


வாடகைக்கு வழங்கப்படும் எல்லா வீடுகளும் மாநகர சபையின் அனுமதிகளினைப் பெற்ற வீடுகளா..? என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

வாடகைக்கு வழங்கப்படும் வீடுகளின் தரத்தினை பல்கலைக்கழக நிர்வாகம் சிறந்த பொறிமுறைக்கூடாக மேற்பார்வை செய்தல் வேண்டும்.

இத்தகைய விடயங்களைப் பின்பற்றும்போது மாணவர்கள் வாடகை விடுதிகளில் எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்திசெய்யமுடியும். வாடகை வீடுகளும் எம் கண்களுக்குத் தெரியாமல் அடிப்படை மனித உரிமைகளை மீறிக்கொண்டு தான் இருக்கின்றன. தற்போதைய காலத்தில் ஏராளமான முதலாம் தலைமுறைப் பட்டதாரிகள் பல்கலைக்கழகத்தில் கற்றுவருகின்றார்கள். இதனைக்காட்டிலும் பெற்றோரின் வருமானத்தில் கல்விச் செலவினை ஈடுசெய்யமுடியாது நெருக்கடிக்குள்ளாகும் மாணவர்களும் உள்ளார்கள். இத்தகைய மாணவர்களின் கல்வியில் தங்குமிடம் ஒரு தடையாக இருந்துவிடக்கூடாது என்பதில் பல்கலைக்கழக சமூகமும் தமிழ்ச் சமூகமும் விழிப்பாக இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ் உலகளாவிய தொற்றும், விழிப்புணர்வும்!



நக்கீரன்
சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர்
உளவளத் துணையாளர்

இன்று உலகம் முழுவதும் அண்ணளவாக 41 மில்லியன் மக்கள் எய்ட்ஸ் தொற்றுக்குட்பட்டுள்ளனர். 6 இலட்சத்து 30 ஆயிரம் பேர் எய்ட்ஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். 2024ஆம் ஆண்டில் மட்டும் உலகம் முழுவதும் 1.4 மில்லியன் மக்கள் புதிதாக எய்ட்ஸ் தொற்றுக்குட்பட்டுள்ளனர். 32 மில்லியன் மக்கள் எய்ட்ஸுக்குச் சிகிச்சை பெறுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை அண்ணளவாக 6 ஆயிரத்து 800 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள அதேநேரம், 4 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இலங்கையில் எய்ட்ஸால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 630 என்பதாகக் காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் எய்ட்ஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் யாழ்ப்பாணம் பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவில் மட்டும் 90 பேர் வரையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உலகெங்கும் பரவியுள்ள இந்த நோயைக் கட்டுப்படுத்த பல்வேறு திட்டங்களைக் கடந்த முப்பது வருடங்களாக அரசாங்கங்கள் பரிசீலித்துவருகின்றன. அமெரிக்காவில் ஆரம்பித்து ஐரோப்பியா, ஆசியா, ஆபிரிக்கா என உலகின் அனைத்துக் கண்டங்களிலும் இந்த நோய் வியாபித்துப் பரவிய போதும், அமெரிக்க, ஐரோப்பிய சமூகங்கள் மட்டுமே நோய்க்கட்டுப்பாட்டில் குறிப்பிடத்தக்க வெற்றியைக் கண்டுள்ளன. ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் நிலை இன்னமும் ஆபத்தான கட்டத்திலேயே உள்ளது. நோயின் பரவுகையில் மக்களின் கல்வி, பொருளாதார, சமூகப் பண்பாட்டுக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**2030ஆம் ஆண்டு இலக்கு**

2030ஆம் ஆண்டுக்குள் உலகில் இருந்து எய்ட்ஸ் தொற்றை முற்றாக இல்லாதொழிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை நோக்கிய பயணத்தில் இலங்கையில் இரண்டு முக்கியமான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவற்றில், முதலாவது தொற்று ஏற்படக்கூடிய செயல்களில் இருந்து முற்றாக விலகியிருத்தல். அதாவது நேரடியாகவோ, மறைமுகமாகவோ எய்ட்ஸ் தொற்றக்கூடிய வாய்ப்புகளில் இருந்து விலகுவது என்பதை இது குறிக்கின்றது.

இரண்டாவதாக, 95,95,95 முன்னெடுப்பு அமைகின்றது. அதாவது, தொற்றுள்ள மக்களில் 95 வீதமானவர்களைப் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களின் தொற்று நிலையை அவர்களுக்குத் தெரியப்படுத்தல் என்பதே முதலாவது 95 ஆகும். இரண்டாவது 95 என்னவெனில், இவ்வாறு தொற்றுநிலை தொடர்பில் தெரிந்தவர்களில் 95 வீதமானவர்களை சிகிச்சைக்கு உட்படுத்துதல் ஆகும். மூன்றாவது 95 என்பது, சிகிச்சை பெறுபவர்களில் 95 வீதமானவர்களின் தொற்றுநிலையை பூச்சியமட்டத்தில் வைத்திருப்பதாகும்.

இந்த 95,95,95 இலக்குசார் செயற்றிட்ட முன்னெடுப்பில், இலங்கையின் பயணம் ஓரளவு வெற்றிமிக்கதாகவே அமைந்துள்ளது. இலங்கையில் எய்ட்ஸ் தொற்றுக்கு உட்பட்டவர்களில் 88 வீதமானவர்களுக்கு அவர்களது தொற்றுநிலை தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் 81 வீதமானவர்கள் சிகிச்சைக்கு உட்பட்டுள்ளனர்.

**உலகளாவிய தரவு**

உலகளாவிய தரவுகளின் அடிப்படையில், எய்ட்ஸ் தொற்றுக்கு உட்பட்டவர்களில் பெண்களே அதிகமானவர்களாக உள்ளனர். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை இந்தத் தரவு மாறுபடுகின்றது. இங்கு எய்ஸ்ட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் ஆண்களே அதிகமானவர்களாகக் காணப்படுகின்றனர். இதன்படி ஆண், பெண் தொற்று விகிதம் 10:3 என்பதாக அமைந்துள்ளது. கடந்த வருடம் 680 ஆண்களும், 76 பெண்களும் எய்ட்ஸ் தொற்றாளர்களாக அவதானிக்கப்பட்டுள்ளனர். இது சமுதாயப் பிரச்சினையைக் கோடிட்டுக் காட்டுகிறது.

**தொற்றுக்கு உள்ளாவோர் யார்?**

உலகம் முழுவதும் எய்ட்ஸ் தொற்றுக்கு இலக்காகக் கூடியவர்களாக, மாற்றுப் பால்நிலையைச் சேர்ந்த சமூகத்தினர், போதைமருந்தை ஊசிமூலம் ஏற்றிக் கொள்வோர், பாலியல் தொழிலாளர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள், ஊசிமூலம் போதைப்பொருள்களை ஏற்றிக்கொள்வோர், சிறைகளில் உள்ளோர் ஆகியவர்களே காணப்படுகின்றனர். இலங்கையிலும் பிரதான தொற்றாளர்களாக அத்தகையவர்களே அமைந்துள்ளனர்.

# கொடிய அரக்கன்



உலகின் அழகான தீவுகளில்
முதலிடம் பெற்ற இலங்கைக்கு
ஏன் இந்த அவல நிலை?

வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு
வயல் நிலங்கள் பெரும் சேதம்!
உயிரிழப்புகள் ஏராளம்!
கண்ணீரில் வாழும் குடும்பங்கள்!
இருப்பிடங்கள் யாவும் வெள்ளத்தில்
கோவில்களும் தப்பவில்லை!

வெளிநாடுகளின் பேருதவி
பேரிடர் கால நிவாரணம்

இவற்றால் நிம்மதி
கிடைத்து விடுமா?

பண்டைய மனிதன்
இயற்கையை வழிபட்டான்!
இன்று யாவும் மாறிவிட்டது!
பூகோள வரை படத்திலும்
மறைந்து விடுமா நம் நாடு?

ஆக்கம்- தவமணிதேவி
கணேசலிங்கம்
மூதாளர் அன்பு இல்லம்
சிவபுரவளாகம் ஏ9 வீதி, முகமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பெண்கள் உடைத்தெறிந்த மரபுக் கூண்டுகள்!

சிவபாலன் ரக்ஷ்னா



"நாய் வாலை நிமிர்த்த ஏலுமெண்டால், பெண் புத்தியையும் நிமிர்த்தலாம்!" யாழ்ப்பாணத்தின் மண் வாசனை வீசும் இந்த ஒற்றைப்பழமொழிதான், இன்று நாம் எழுப்ப விரும்பும் ஆழமானதொரு விவாதத்தின் தொடக்கம். சமூகத்தின் அறிவுக்கருவூலங்களாக, வாழ்வியல் அனுபவங்களின் பிழிவுகளாக விளங்கும் பழமொழிகளை, நாம் வாழும் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் மக்கள் இன்றும் ஆங்காங்கே பேசக் கேட்கலாம். எமது மண் சார்ந்த களஆய்வின்மூலம், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு வயதுப்பிரிவினரிடமும் பேசப்பட்டபோது, ஒரு உண்மை தெளிவாகப் புரிந்தது. எமது பாரம்பரிச் சொற்கள், குறிப்பாகப் பழமொழிகள், தற்போதுள்ள சமுதாய மாற்றத்தின் வேகத்தில் பயன்பாட்டை இழந்து வருகின்றன.

இந்தப்பழமொழிகள் வெறும் மொழி மரபுச்சின்னங்கள் மட்டுமல்ல அவை, ஒரு காலத்தில் எமது சமூகத்தின் ஆணாதிக்கக் கண்ணோட்டத்தைப் பதிவுசெய்த வரலாற்று ஆவணங்கள். குறிப்பாக, இந்தப் பழமொழிகளில் ஒரு பகுதி, பெண்களின் அறிவாற்றல், குணநலன், ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கியும், இழிவுபடுத்தியும் பேசும் போக்கைக் கொண்டிருந்தது.

**யாழ்ப்பாண மண்ணின் பழமொழிக் களஞ்சியமும் பெண்மை மீதான விமர்சனமும்**

எமது சமுதாயம் பாரம்பரியமாக வேளாண்மை மற்றும் கூட்டுக்குடும்பக் கட்டமைப்பை மையமாகக் கொண்டது. இந்தப் பின்னணியில், பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட சில எல்லைகளும், விதிகள் நிறைந்த வாழ்க்கைமுறையும் திணிக்கப்பட்டிருந்தன. இந்தத் திணிப்புகள் பழமொழிகள் வடிவில் காலம்காலமாகக் கடத்தப்பட்டன. அவற்றினை நோக்குகையில்,

புத்திக்கு பூட்டு : அதாவது அறிவைக் கட்டுப்படுத்தும் பழமொழிகள் இதில் உள்ளடங்குகின்றன.

பெண்களின் அறிவாற்றல் மற்றும் முடிவெடுக்கும் திறன் மீதான நம்பிக்கையின்மையைப் இப் பழமொழிகள் வெளிப்படுத்துகின்றன. எமது கள ஆய்வில், இத்தகைய பழமொழிகள் இன்னும் வயதானவர்கள் மத்தியில் பயன்படுத்தப் படுவதைக் காணமுடிந்தது.

"பெண் புத்தி பின்புத்தி." இப் பழமொழியின் விளக்கத்தினை நோக்குகையில், பெண்களின் அறிவு உடனடியாக முடிவெடுக்கப் போதுமானதல்ல அவர்கள் முடிவெடுத்தபின்பே சரியோ தவறோ எனத் தெரிந்து கொள்வார்கள். அதாவது, அவர்களின் அறிவு பின்னால் மட்டுமே வேலை செய்யும்.

யதார்த்தம் :

இன்று, யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுபவர்களில் பெண்களே அதிகம். பல்கலைக்கழகங்கள், அரச பதவிகள், மருத்துவம், சட்டம் போன்ற அறிவு சார்ந்த துறைகளில் பெண்கள் தலைமை தாங்குகின்றனர். இத்தகைய சூழலில், 'பின்புத்தி' என்ற கூற்று, அவர்களின் ஆற்றலைத் திசைதிருப்பி மதிப்பிழக்கச் செய்யும் வீண் முயற்சியே ஆகும். ஒரு பெண் தொலைநோக்குப் பார்வையுடன் சிந்திக்கும்போது, அதை ஆண் சமூகம் 'பின் புத்தி' எனக் குறைகூறிய ஆணாதிக்க மனநிலையே இங்கே வெளிப்படுகிறது.

"நாய் வாலை நிமிர்த்த ஏலுமெண்டால், பெண் புத்தியையும் நிமிர்த்தலாம்."

விளக்கம்: நாயின் வாலில் உள்ள இயல்பான கோணலை மாற்ற முடியாதது போல, பெண்ணின் இயல்பான குணத்தையோ, மனநிலையையோ, அறிவையோ மாற்றமுடியாது. அதாவது, அவள் 'திருத்த முடியாதவள்' அல்லது 'நிலைத்தன்மை அற்றவள்'.

யதார்த்தம்: இந்தப் பழமொழி பெண்ணின் அறிவையும் நடத்தையையும் விலங்குடன் ஒப்பிட்டுப் பேசுவதன் மூலம், அவளை இரண்டாம் நிலைக்குத் தள்ளுகிறது. இன்று, பெண்கள் கல்வி மூலம், அனுபவங்களின் மூலம் தம்மைத் தாமே செதுக்கிக் கொள்கிறார்கள். 'திருத்தமுடியாதவர்' என முத்திரை குத்தப்பட்ட யாழ்ப்பாணத்துப் பெண்கள், போரினால் பாதிக்கப்பட்ட தமது குடும்பங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்று, பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் தம்மை நிமிர்த்தி, எமது சமூகத்தின் முதுகெலும்பாக நிற்கிறார்கள். இந்த நிமிர்வு, பழமொழியைப் பேசியவர்களின் கண்ணோட்டத்தையே நிமிர்த்தி விட்டிருக்கிறது.

> யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுபவர்களில் பெண்களே அதிகம். பல்கலைக்கழகங்கள், அரச பதவிகள், மருத்துவம், சட்டம் போன்ற அறிவு சார்ந்த துறைகளில் பெண்கள் தலைமை தாங்குகின்றனர்.

கட்டுப்பாட்டுச் சுவர்கள்: அதாவது பாலியல் மற்றும் ஒழுக்கத்தைக் குறித்த பழமொழிகள் இவைகளாகும்.

பெண்களின் பாலியல் கட்டுப்பாடும், கற்பும் மிகவும் வலியுறுத்தப்பட்ட எமது சமுதாயத்தில், இந்த அம்சங்களைக் குறித்த கடுமையான பழமொழிகள் ஏராளம். ஒரு பெண்ணின் ஒழுக்கம் மட்டுமே குடும்பத்தின் கௌரவத்தைத் தீர்மானிப்பதாக அவை சித்தரித்தன.

"பாலும் பொல்லாதது, பாவையும் பொல்லாதது."

விளக்கம்: பால் திரிந்து போனால் உபயோகமில்லை. அதேபோல, ஒரு பெண் ஒழுக்கத்தை மீறினால் (குறிப்பாகக் கற்பு நிலை பிறழ்ந்தால்), அவளும் குடும்பத்துக்கும் உதவாமல் போய்விடுவாள்.

யதார்த்தம்:

இந்தப் பழமொழி, ஒரு பெண்ணின் இருத்தலையே பயன்பாட்டுப் பொருளாக அணுகுவதைக் காட்டுகிறது. ஒரு சிறிய தவறுக்காக ஒரு பெண்ணின் ஒட்டுமொத்தப் பண்பையும், வாழ்க்கையையும் 'பொல்லாதது' என்று முத்திரை குத்துவது, சமத்துவம் பேசும் இக்காலத்தில் எடுபடாது. நவீன சமுதாயம் பெண்ணின் தவறை அல்லது முடிவை தனிப்பட்ட ஒன்றாகக் கருதுகிறதே தவிர, அதை ஒட்டுமொத்தக் குடும்பத்தின் கௌரவப் பிரச்சினையாகச் சுமையாக்குவதில்லை. இன்று யாழ்ப்பாணப் பெண்கள் தமது தனிப்பட்ட உரிமைகளுக்கும், தெரிவுகளுக்கும் மதிப்புக் கொடுக்கப் போராடுகிறார்கள்.

"பெண்ணைப் பெத்தவன் பொறுமைசாலியாயிருக்கோணும்."

விளக்கம்: பெண்ணைப் பெற்றோர், அவளால் எப்போது வேண்டுமானாலும் அவமானம் ஏற்படலாம் என்ற பயத்தில் வாழ்வதால், அவர்கள் எப்போதும் பொறுமையாக இருக்க வேண்டும்.

யதார்த்தம்: ஒரு குழந்தையை வளர்ப்பதே பெற்றோரின் பணி. ஆனால், பெண் குழந்தையை வளர்ப்பது மட்டும் ஏன் கூடுதல் 'பொறுமை' கேட்கிறது? சமூகத்தின் கட்டுப்பாடுகளும், பழமொழிகளின் அச்சமூட்டலும் பெண்ணின் சுதந்திரத்தை முடக்கியதாலேயே, பெற்றோர் பொறுமையாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்று, யாழ். சமூகம் இந்த அச்சத்தைக் கடந்து, தமது பெண் பிள்ளைகளை தைரியமாக வெளிஉலகில் சாதனை செய்ய அனுப்பத் தயாராக இருக்கவேண்டும்.

**உணர்வு மற்றும் நடத்தை குறித்த பழமொழிகள்**

பெண்களின் பேச்சையும், செயலையும், உணர்வுத் தேவையையும் கூட நகைப்பிற்குரியதாக அல்லது கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகப் பழமொழிகள் சித்தரித்தன.

"நாலு சண்டைக்கும் பெண் வேணும், நாலு பேச்சுக்கும் பெண் வேணும்."

விளக்கம்: பெண் சண்டைக்கு மட்டுமே உரியவள்; சும்மா பேசுவதைத் தவிர வேறு பயன் இல்லை. (இதன் இன்னொரு பொருள்: ஆண்களுக்கு நடக்கும் நான்கு சண்டைகளில் பெண்களுக்குப் பங்கு உண்டு).

யதார்த்தம்: இந்தப் பழமொழி பெண்ணைப் புறங்கூறும் நபராக, அல்லது குடும்பத் தகராறுகளுக்கு மூலகாரணமாகச் சித்திரிக்கிறது. ஆனால், கள ஆய்வுகள் மற்றும் யதார்த்தத்தின்படி, பெரும்பாலான சண்டைகளைத் தணிப்பவளாகவும், குடும்ப உறவுகளை இணைப்பவளாகவுமே பெண் தனது வகிபாகத்தை வகிக்கின்றாள் . 'நாலு பேச்சு' என்பது இன்று 'நாட்டுக் காரியங்களைப் பேசும் மேடைப்பேச்சு' ஆகவும், 'அறிவார்ந்த கலந்துரையாடல்' ஆகவும் மாறியிருக்கிறது.

மேற்கூறிய வகையில் யாழ்ப்பாணத்தின் பெருமை வாய்ந்த மொழியும், இலக்கியமும், எமது மண்ணின் வீரமும், இன்று புதிய தலைமுறைப் பெண்களின் கைகளில் இருக்கின்றன. அவர்கள், இந்தப் பழமொழிகள் ஏற்படுத்திய நிழல்களிலிருந்து முழுமையாக விடுபட்டு, சூரிய ஒளி படும் வெளிச்சத்துக்கு வந்துவிட்டார்கள். எனவே பெண்களை இழிவுபடுத்தும் இந்தப் பழமொழிகளின் பயன்பாடு குறைந்து வருவது, எமது சமூகத்தின் முதிர்ச்சியையும், முற்போக்குச் சிந்தனையையும் காட்டுகிறது. இந்தப் பழமொழிகள், எமது முன்னோர்களின் அச்சங்களையும், அறியாமைகளையும் மட்டுமே காட்டினவே தவிர, பெண்களின் உண்மையான ஆற்றலை அல்ல.

மாற்றத்தின் குரலாக யாழ்ப்பாணத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் ஏராளம். போர்க்காலத்திலும், அதன்பின்னர் புனர்நிர்மாணக் காலத்திலும், பெண்களின் பொருளாதார, சமூக நிர்வாகத் திறன்கள்தான் எமது சமூகத்தை நிலை நிறுத்தின. 'பெண் புத்தி பின்புத்தி' என்று பேசிய நாக்குகளின் முன், இன்று யாழ். மகளிர் சவால்களை எதிர்கொண்டு, முன்னோக்கிச் சிந்தித்து வெற்றிகளை ஈட்டி வருகிறார்கள் என்பது எம் யாவராலும் மறக்கமுடியாத உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டாசுகளால் ஏற்படும் ஆபத்தை குழந்தைகள் தவிர்ப்பது எப்படி?



மருத்துவர் பா.சயந்தன்
குழந்தைகள், சிறுவர் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ். போதனா மருத்துவமனை

பண்டிகைகள் மகிழ்ச்சி, உற்சாகம் மற்றும் குடும்ப ஒற்றுமையைக் கொண்டுவருகின்றன. ஆனால், ஒவ்வொரு பண்டிகைக் காலத்திலும் இலங்கையின் பல மருத்துவமனைகளில் குழந்தைகளில் பட்டாசு தொடர்பான விபத்துகள் அதிகரிப்பது ஒரு கவலை தரும் உண்மை. இந்த விபத்துகளில் பெரும்பாலானவை முழுமையாகத் தவிர்க்கக்கூடியவை.

**குழந்தைகள் ஏன் அதிக ஆபத்தில் உள்ளனர்?**
ஒளி, சத்தம் ஆகியவை குழந்தைகளை இயல்பாகவே ஈர்க்கும். பட்டாசுகள், குறிப்பாக வெடிகள், பூந்திரிகள், வாணங்கள் போன்றவை குழந்தைகளுக்கு கை, முகம் மற்றும் உடலில் தீக்காயங்களை
கண் காயங்கள் மற்றும் நிரந்தர பார்வை இழப்பை கேள்வித்திறன் பாதிப்பை
விரல் துண்டிப்பு அல்லது ஆழமான காயங்களை வீட்டில் தீ விபத்துகளை ஏற்படுத்தலாம்.

பல தீவிர விபத்துகள் பட்டாசு கொழுத்தும் போது ஏற்படுவதில்லை. மாறாக, வெடிக்காத பட்டாசுகளை மீண்டும் கொழுத்த முயற்சிக்கும்போது, அல்லது பெரியவர்களைப் பின்பற்ற முயற்சிக்கும் குழந்தைகளால் சம்பவிக்கின்றன.

**பொதுவான தவறுகள்**
பெரியவர் கண்காணிப்பு இல்லாமல் குழந்தைகளைப் பட்டாசு ஏற்ற அனுமதித்தல்
பட்டாசுகளை 'விளையாட்டுப்பொருள்' போல் குழந்தைகளுக்கு வழங்குதல்
வெடிக்காத பட்டாசுகளை மீண்டும் கொழுத்துதல்
வீடுகளுக்குள் அல்லது வாகனங்களுக்கு அருகில் பட்டாசு பயன்படுத்துதல்
பட்டாசுகளை குழந்தைகளுக்கு எளிதில் எட்டக்கூடிய இடங்களில் வைத்தல்

**பெற்றோர் என்ன செய்யவேண்டும்?**
1. பெரியவர் கண்காணிப்பு அவசியம்
குழந்தைகள் தனியாக பட்டாசு ஏற்ற அனுமதிக்கக்கூடாது.

2. சிறுவர்களிடம் பட்டாசுகளை கொடுக்க வேண்டாம்
12 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் ஸ்பார்க்லர்கள்கூட பயன்படுத்தக்கூடாது.

3. பாதுகாப்பான மாற்று வழிகளை தேர்ந்தெடுக்கவும்
அலங்கார விளக்குகள், விளக்குத் தீபங்கள், இசை நிகழ்ச்சிகள் போன்றவைப் பாதுகாப்பானவை.

4. திறந்தவெளிகளில் மட்டுமே பட்டாசுகளைப் பயன்படுத்தவும்
வீடுகள், மின்கம்பிகள், வாகனங்கள் மற்றும் மக்கள் கூட்டத்திலிருந்து தூரத்தில் இருக்கவேண்டும்.

5. வெடிக்காத பட்டாசுகளை மீண்டும் ஏற்ற வேண்டாம்
அவற்றை நீரில் நனைத்து பாதுகாப்பாக அகற்றவும்.

6. பாதுகாப்புக் கவனம்
தளர்ந்த உடைகளைத் தவிர்க்கவும். அருகில் நீர் அல்லது மணல் வைத்திருக்கவும்.

7. பட்டாசுகளைப் பாதுகாப்பாக சேமிக்கவும்
உலர்ந்த, பூட்டிய இடத்தில், குழந்தைகள் எட்ட முடியாதவகையில் வைக்கவும்.

**விபத்து ஏற்பட்டால் செய்ய வேண்டியது**

தீக்காயம் ஏற்பட்டால்: காயமான இடத்தில் 20 நிமிடங்கள் குளிர்ந்த நீர் ஊற்றவும்
எண்ணெய், பற்பசை, பாரம்பரிய மருந்துகள் போட வேண்டாம்
கண் காயம் ஏற்பட்டால்: கண் தேய்க்க வேண்டாம், மெதுவாக மூடி உடனடி மருத்துவ உதவிபெறவும்
சிறிய காயமாகத் தோன்றினாலும் உடனே மருத்துவமனை செல்லவும்

ஒரு குழந்தையின் வலி, நிரந்தர ஊனம் அல்லது உயிரிழப்பிற்கு எந்த பண்டிகை மகிழ்ச்சியும் ஈடாகாது.
பட்டாசு விபத்துகள் விதி அல்ல — அவை தவிர்க்கக்கூடியவை.
பெற்றோர், பெரியவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக தலைவர்கள் அனைவரும் குழந்தைகளின் பாதுகாப்பிற்குப் பொறுப்பாளர்கள்.
காயம் இல்லாத ஒளியுடன் பண்டிகையைக் கொண்டாடுவோம்.
மருத்துவமனை அல்ல — மகிழ்ச்சியே நம் நினைவாக இருக்கட்டும்.

# இரண்டாயிரத்து இருபத்தியாறே எழுந்து வா!

இரண்டாயிரத்து இருபத்தியாறே
எம்மோடோர் ஒப்பந்தம் செய்யவேண்டும்
புதியவளே! இருபத்தியாறே!
கண்ணூறு இல்லாமலே எமையெல்லாம் நீ
காதலிக்க வேண்டும்
வந்துபோன ஆண்டுகளெல்லாம்
விளைத்த கொடுமைகள் ஏராளம்
இரண்டாயிரத்து இருபத்தைந்து
இழைத்த கொடுமைகளை மறக்கமுடியுமா?
பெருவெள்ளம், மண்சரிவு, டித்வா புயல்
ஊழித்தாண்டவம் காட்டி உயிர்களைப் பறித்ததே
எம்மவர்களுக்கா நீயென்ன நூதனம்
புதிசாய் காட்டப்போகிறாய்
பரவாயில்லை நீயும் வந்துபோ
எத்தனை ஆண்டுகளாக
கத்திக் கேட்கிறோம்
இதற்கொரு அர்த்தமில்லையே
தாவென்று தொழுது அழுதுகேட்டாலும்
தமிழருக்குத் தீர்வு என்பது கிடைக்காது
புத்தம் புதிய ஆண்டே!
பூமியில் உனது வரவாவது நல்வரவாகட்டும்
இழந்தன யாவும்
எமக்கிங்கே மீண்டும் கிடைக்கட்டும்
பழந்தமிழர் பண்பாட்டு விழுமியங்களை
தொலைத்துவிட்டு
குறியீடில்லாத
மனிதர்களாக வலம் வருகின்றோம்
பேசும் மொழியிலும்
அணியும் ஆடையிலும்
எத்தனை எத்தனை பிறழ்வுகளை
சூடிக்கொண்டிருக்கிறோம்
காலம் மாறிப்போச்சு
கண்ணீர் கதைகளைத்தான்
எழுதிக்கொண்டிருக்கிறோம்
இப்படித்தான் வாழவேண்டுமென
மரபினை இழந்து
எப்படியும் வாழலாமென்ற
கண்மூடித்தனமான வழிகளில்
கால் பதித்திருக்கிறோம்
காலாதி காலமாய் கட்டிக் காத்த
"வாழ்க்கை" விதிமுறைகளையெல்லாம்
அன்று பேணிவாழ்ந்ததால்
ஞாலத்தில் உயர்ந்த மனிதர்களாய்
வலம் வருகிறோம்
இன்றெல்லாம்
எல்லாமே கேள்விக்குறியாச்சே!
இரண்டாயிரத்து இருபத்தியாறே
நீயாவது முயற்சி செய்

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைக்குள் கத்திக்குத்துத் தாக்குதல்; ஒருவர் கைது; ஏனையோருக்கு வலை

யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள கடையொன்றுக்குள் வைத்து நடத்தப்பட்ட கத்திக்குத்துத் தாக்குதல் தொடர்பில், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓட்டோவொன்றில் பயணித்த நபரை மோட்டார்சைக்கிள்களில்பின்தொடர்ந்து வந்த நால்வர், கடையொன்றுக்குள் வைத்து அவர் மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றிருந்தனர். காயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விடயம் தொடர்பில் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளுக்கு அமையவே, சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 2 கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன், இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட மூன்று மோட்டார்சைக்கிள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)



மானிப்பாய் இஸ்டிரியூட் ஒப் மெடிக்கல் சையன்ஸ் தாதியர் கல்வி நிலையத்தில், உயர் தேசிய டிப்ளோமா தாதியர் கற்கைநெறி, தாதிய உதவியாளர் பயிற்சிநெறி, பராமரிப்பாளர் பயிற்சி நெறி போன்ற கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மருத்துவ நிபுணர் எஸ்.ரவிராஜ், சிறப்பு விருந்தினராக மருத்துவர் ஆர்.சுரேந்திரகுமாரன், மருத்துவர் பி.டினேஷ் கலந்துகொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்கள். (ம)

## மருத்துவமனையில்...

எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

தனிப்பட்ட துப்பாக்கியை பாதாள உலகக் குழுவினரிடம் வழங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் கீழ், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார். அவரை ஜனவரி மாதம் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இவ்வாறான நிலையிலேயே, டக்ளஸ் தேவானந்தாவின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு, மருத்துவரின் பரிந்துரைக்கு அமைய சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## டக்ளஸ்...

ளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போது, டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலாகவே, டக்ளஸிடம் வழங்கப்பட்ட துப்பாக்கிகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாக அமைச்சர் நளிந்த கூறியுள்ளார்.

2000ஆம் ஆண்டுகாலப் பகுதியில் டக்ளஸ் தேவானந்தாவிடம் 13 ரி56 ரகத் துப்பாக்கிகளும், ஆறு பிஸ்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. அவை தொடர்பான விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. விசாரணைகள் இடம்பெற்று வருவதால், மேலதிக தகவல்களைத் தற்போது வெளிப்படுத்த முடியாத சூழல் காணப்படுகின்றது என்று அரசாங்கத்தின் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-44)

## திஸ்ஸ...

என்று யாழ்ப்பாணம் நாகவிகாரையின் விகாராதிபதி விமலதர்ம தேரர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மக்களுக்குச் சொந்தமானது. அதை மக்களிடமே வழங்க வேண்டும். ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு நான் இந்த விடயத்தைப் பலமுறை தெரியப்படுத்தியுள்ளேன். பல்வேறு அறிக்கைகளையும் அனுப்பியுள்ளேன். மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைக்குமாறு தற்போது மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

இந்த விடயம் தற்போது அரசியலாக மாறியிருக்கின்றது. இதில் அரசியலுக்கு இடமில்லை. இவ்வாறானபிரச்சினைகள் இல்லாமல், அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-26)

## படகு...

தற்போது அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. நேற்றுமுன்தினம் மாலை 100 பயணிகளுடன் நெடுந்தாரகைப் படகு புறப்பட்ட நிலையில், 70 பயணிகள் குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குப் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, அவர்கள் 70 பேரும் இணைந்து 45 ஆயிரம் ரூபாவுக்கு தனியார் படகொன்றை வாடகைக்கு அமர்த்தி பயணத்தைத் தொடர்ந்துள்ளனர். 200 ரூபா செலவுடன் பயணிக்க வேண்டிய இடத்தில் நான்கு மடங்கு செலவில் தாம் பயணத்தை மேற்கொண்டதாக அவர்கள் கூறியுள்ளனர். நெடுந்தீவுக்கான போக்குவரத்தில் இவ்வாறான இடையூறுகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. எனவே, அதிகாரிகள் இந்த விடயத்தைக் கருத்திற் கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-100)

## அலையில்...

யைச் சேர்ந்த வி.ஜெசிந்தன் (வயது-26) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுளள்ளார். சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

தாளையடி கடற்பரப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீராடிக் கொண்டிருந்த குறித்த இளைஞர், அலையுடன் இழுத்துச் செல்லப்பட்டார். அவர் காணாமற்போயிருந்த நிலையில், அவரை மீட்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இவ்வாறான நிலையிலேயே, இரு தினங்களுக்குப் பின்னர் நேற்று அதிகாலை அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ-ம-66)

## திஸ்ஸ விகாரைப்...

தையிட்டியில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:

திஸ்ஸ விகாரையில் எதிர்வரும் 3ஆம் திகதி வழமையான பூஜை வழிபாடுகள் தான் நடைபெறும். விசேட பூஜை வழிபாடுகள் எவையும் இடம்பெறாது. தெற்கில் இருந்து புத்தர்சிலை எடுத்து வருவதாகவும், அன்றையதினம் விசேட பெரஹரா நடைபெறவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அத்தகைய நடவடிக்கைகள் எவையும் இடம்பெறவில்லை. எனவே, அரசியல் நோக்கத்துக்காக எவரும் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடாது.

தையிட்டி விகாரை அமைந்துள்ள தனியார் காணிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கத்தால், புதிய குழுவொன்றை அமைத்துள்ளார்கள். அந்தக் குழுவிடம் எமது விகாரைக்கான ஆவணங்களை கையளித்துள்ளோம்.

திஸ்ஸ விகாரை சட்டவிரோதமானது என்று தீர்ப்பு வழங்கப்பட்டால், அதை ஏற்பதற்குத் தயாராகவே உள்ளேன். விகாரைக்கான காணி விடுவிப்புத் தொடர்பில் இதுவரை எவரும் என்னுடன் பேசவில்லை. அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்வதால், அதற்கு மதிப்பளிக்கும் வகையில் புதிய கட்டுமானங்கள் எவையும் அமைக்கப்படாது - என்றார். (அ-ம-26)

## நாணய...

வருகை தரவுள்ளனர். இலங்கைக்கும் நாணய நிதியத்துக்கும் இடையிலான ஐந்தாம் கட்டக் கடன் வழங்கல் தொடர்பில் தற்போது உரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு கடந்த 15ஆம் திகதி நாட்டுக்கு வந்திருந்தது. இதன் தொடர்ச்சியாகவே, உயர்மட்டக் குழுவொன்று ஜனவரியின் ஆரம்பத்தில் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-இ)

## தருமபுரத்தில்...

ஏழாலைப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபரிடம் இருந்து 41 ஆயிரத்து 860 ரூபா பணமும், ஒரு சங்கிலியும், 4 மோதிரங்களும், ஒரு தோடும் மீட்கப்பட்டுள்ளன.

வீட்டு உரிமையாளரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டில் 23 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட நகைகள் திருடப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால், மிகுதி நகைகள் தொடர்பான விசாரணைகளில் பொலிஸார் கவனம் செலுத்தி வருகின்றனர். (அ-ம-113)

## கொழும்பு...

வருகின்றன. கொழும்பு மாநகரில் ஆட்சியமைப்பது தொடர்பில் அரசாங்கத்துக்கும் எதிரணிக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டிருந்தன. எனினும், இறுதிநேரத் திருப்பங்கள் காரணமாக தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தது.

புதிய நிர்வாகத்தின் முதலாவது பட்ஜெட் கடந்த 22 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட நிலையில், அந்த பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 57 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இவ்வாறான பின்னணியிலேயே, இன்றையதினம் இரண்டாவது தடவையாக பட்ஜெட் முன்வைக்கப்படவுள்ளது. (அ-ம-44)

## செம்மணி...

மாதாந்தக் கூட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போதே, செம்மணி வளைவுப் பகுதியில், அசைவ உணவகங்கள், விடுதிகள், விருந்தகங்கள் போன்றவற்றை அமைப்பதற்குத் தடை விதித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூரான் செம்மணி வளைவு, சிவலிங்கம் மற்றும் கோவில்கள் ஆகியன காணப்படுவதால், அந்தச் சூழலுக்குப் பொருத்தமில்லாத வியாபார நிலையங்களை அமைப்பது முறையற்றது என்ற அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## பிரதேசசபை...

ஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, சங்கிலியன் பூங்கா பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர் நாளைவரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26-66-20)

## மகனைத்...

வவுனியா - நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த வையாபுரி சந்திரன் (வயது -69) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது மகனான ஜெயகாந்தன் கடந்த 2008ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். அவரை மீட்பதற்காக பல்வேறு போராட்டங்களையும், வலியுறுத்தல்களையும் குறித்த தந்தை முன்னெடுத்து வந்தார். எனினும், அவருடைய முயற்சிகள்எவையும்பயனளிக்கவில்லை. இவ்வாறான நிலையிலேயே, மகனைக் காணாமல் அந்தத் தந்தை நேற்று உயிரிழந்துள்ளார். (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலகத்துக்குள் புகுந்து கிராம அலுவலர்மீது அச்சுறுத்தல்!

## மன்னாரில் போராட்டம்

**மன்னார், டிசெ.31**

**மன்னார் பிரதேச செயலகத்தில் கடமையில் இருந்த பெண் கிராம அலுவலரைத் தாக்க முயற்சித்த நபர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரி மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றுகின்ற கிராம அலுவலர்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை பணிப்பகிஷ்கரிப்பில் குதித்துள்ளனர்.**

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் நகர பிரதேச செயலகத்தில் புதுக்குடியிருப்புக் கிராம அலுவலர் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது பிரதேச செயலகத்துக்குள் நுழைந்த கும்பல் குறித்த பெண் கிராம அலுவலரைத் தாக்க முற்பட்டதோடு, அவரைத் தகாத வார்த்தைகளால் பேசி அவரது கடமைக்கு இடையூறு ஏற்படுத்தினர்.

குறித்த சம்பவத்துக்கு கிராம அலுவலர்கள் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கண்டித்ததோடு நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தையும் முன்னெடுத்த னர். மன்னார் நகர பிரதேச செயலகத்துக்கு முன்னால் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஒன்றுகூடி கறுப்புப்பட்டி அணிந்து பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

கிராம அலுவலரைத் தாக்க முற்பட்ட குறித்த நபர்களைக் கைதுசெய்து சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கிராம அலுவலர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும்.

தமக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் ஐக்கிய கிராம அலுவலகர் சங்கத்தின் மன்னார் நகர பிரதேச கிளையின் தலைவர் கமலேஸ்வரன் தெரிவித்தார். (ச-56,60)

# திஸ்ஸ விகாரைக்கு எதிராக மூன்றாம் திகதி போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 31

தையிட்டி திஸ்ஸ விகாரையை உடனடியாக அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் போயா தினமான எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகில் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு போராட்ட ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-66)

# பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்துக!

## வவுனியாவில் போராட்டம்

**தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கலை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தி, வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.**

**தையிட்டியில் ஜனநாயக ரீதியாக போராடியவர்கள் கைதுசெய்யப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும்,** குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, தையிட்டி, வவுனியா கல்லுமலை பகுதிகளில் இடம்பெறும் ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-110)

# சடலத்தை அடையாளம் காண்க

யாழ்ப்பாணம், டிசெ.31

வடமராட்சி இன்பர்சிட்டிக் கடற்கரையில் கரையொதுங்கிய சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களிடம் பருத்தித்துறை பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்பர்சிட்டிக் கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கடந்த 24 ஆம் திகதி காலை கரையொதுங்கியது.

இதையடுத்து பருத்தித்துறை திடீர் மரணவிசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

45 - 50 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் ரீசேட்டும் நீல நிறக் காற்சட்டையும் அணிந்த நிலையில் காணப்பட்டது. **பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ள குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் அதனை அடையாளம் காண உதவுமாறு** பொதுமக்களிடம் பருத்தித்துறை பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-100)

# வேகக்கட்டுப்பாடின்றி வாகனம் விபத்து!

*முல்லைத்தீவு, டிசெ.31*

வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் ஒன்று வீதியைவிட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்டம் ஏ-9 வீதியில் கொக்காவில் சந்திக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. (ச-9)

**காணி விற்பனைக்கு**

சண்டிலிப்பாயில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
077 794 7192

(CS/60337) J-1

**பணிப்பெண் தேவை**

யாழ். நல்லூரில் உள்ள வீட்டிற்கு வீட்டு வேலை மற்றும் குழந்தை பராமரிப்பு செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
077 9866 032

(CS/60325) J-1

**கடை இடமாற்றம்**

(தர்மலிங்கம் கோண்டாவில் ஆட்டிறச்சிக் கடை)

ஸ்ரேசனடி, இல - 02 வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கடை தற்போது நாளை 01.01.2026 ல் இருந்து திருநெல்வேலி சந்தை மேல்தளத்தில் வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் - குமரன்
076 367 1525, 077 113 7471

(CS/60334) J-1

**வேலையாட்கள் தேவை**

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த,பழக விரும்பும் ஆண்/பெண் வேலையாட்கள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 076 632 3554

**பணியாளர் தேவை**

திருநெல்வேலியில் அமைந்துள்ள தனியார் கால்நடை வைத்தியசாலைக்கு பணியாளர் தேவை. ஆண்/ பெண்

தொடர்புகளுக்கு:-
076 638 4556

(CS/60334) J-1

**மரண அறிவித்தல்**

**திருமதி சிறில் இமல்டா (பவியோலா)**

திருமதி சிறில் இமல்டா (பவியோலா) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணி சிறில் அவர்களின் அன்பு மனைவியும், ஜோதினி, லயன் சிங்ஸ்ரன் றமேஷ் (கிங்ஸ்ரன் எலக்ரோனிக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), ஜெயந்தினி (கனடா), சுறேஜினி ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (31.12.2025) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் 13/5, தண்ணீர்த்தாங்கி வீதி, 5ம் குறுக்குத் தெரு, குருநகரில் உள்ள இல்லத்திலிருந்து புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்
திரு.லயன் C.கிங்ஸ்ரன் றமேஷ்
077 604 3794

(CR 46704) A

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மத்தி சமுர்த்தி வீதியில் (வங்கி வீதியில்) 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- தார் றோட் முகப்புடன்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பரம்பரைக் காணி, 1951ம் ஆண்டு உறுதி, தோம்பு யாவும் உண்டு.
- வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலை அமைப்பதற்கும் உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி, செம்மண்தரை, நன்னீரூற்று, அமைதியான சூழல்.
- ஒரு பரப்பின் விலை பதினைந்து இலட்சம் (1500,000/=)
- பருத்தித்துறை வீதியில் இருந்து 250m தூரம்

தொடர்பு:- 076 76 38 141, 076 76 58 176

(CS 28763) A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.12. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.